123

திட்ட

# திராவிட மணிவாசகம்




123
REGISTRAR OF B...
9 - JUL 1958
3
MADRAS

TB
031(3)
N58
1,30,872

இன்டர்நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
நுங்கம்பாக்கம் • சென்னை-34

# புதிய திட்ட
# திராவிட மணி வாசகம்

## மூன்றும் புத்தகம்

E. RATNABAI DAVIS, M.Ed.,
AND
Rev. Br. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.
*Headmaster, Christuraja Training School,*
*Palayamkottai*

[Paper used : 24 lbs. D. Crown White Printing]

இன்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் : : சென்னை–31

# PUTHIYA THITTA
# DRAVIDA MANI VACHAKAM

BY
E. RATNABAI DAVIS, M.ED.,
Rev. Br. M. A. MANUEL, S.H.J., B.A., L.T.

STANDARD III

---

*First Printed*—*Feb.* 1958
*Reprint* (1)—*June,* 1958

TB
03 (3)
NSB

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B, of the
Fort St. George Gazette dated 28-5-1958, Page 6.]

1,30,872
-600 008

(*Copyright*)

*Price* 60 *n.Ps.*

Kabeer Printing Works, Madras (3795)

# முன்னுரை

இந்நூல் வரிசையில் இது மூன்றும் புத்தகம். அரசினர் அண்மையில் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, வகுப்பின் தரத்திற்கு உகந்தவாறு பாடங்களின் பொருளும், அளவும் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் 700 புதிய சொற்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வகுப்பு மாணவ மாணவிகளுக்கேற்ற சிறு பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. வசன பாடங்கள் அனைத்தும் தூய்மையான தமிழில் உயரிய நடைகொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இயற்பெயராக வரும் தவிர்க்க முடியாத இரண்டோர் இடங்களில் மட்டும் ஜ, ஹ என்னும் எழுத்துக்கள் கையாளப் பட்டிருக்கின்றன.

கற்ற பாடங்களின் பொருள், குழந்தைகள் உள்ளத்திற் பதியுமாறு பாடங்களின் இறுதியில் சொற்களஞ்சியமும் பயிற்சிகளும் இணைக்கப் பெற்றுள்ளன. செய்யுட் பாடங்களுக்கு விளக்க உரையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் நன்கு அமைவதற்கு இன்றியமையாத யாவும் இயன்றவரை செய்யப் பட்டுள்ளன.

தமிழன்பர்கள் இந்நூலின் தரம் நோக்கி இதனை ஆதரித்து உதவுவார்கள் என்று திண்ணமாக நம்புகிறோம்.

—பதிப்பாளர்கள்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்த் திருநாடு | ... 1 |
| 2. | எங்கள் வீடு | ... 3 |
| 3. | எங்கள் ஊர் | ... 6 |
| 4. | எங்கள் ஊர்ச் சந்தை | ... 9 |
| 5. | தங்கப் பறவை—1 | ... 12 |
| 6. | காலை நேரம் | ... 15 |
| 7. | மாணவ நண்பர்கள் | ... 17 |
| 8. | தென்னை மரம் | ... 20 |
| 9. | ஔவையார் | ... 24 |
| | படக்கதை (பயிற்சி) | ... 27 |
| 10. | திசைகள் | ... 28 |
| 11. | தங்கப் பறவை—2 | ... 31 |
| 12. | நெற்பானையும் எலியும் | ... 34 |
| 13. | எங்கள் கிராம ஆட்சி | ... 36 |
| 14. | பாரதியார் | ... 39 |
| 15. | உங்கள் கடமை | ... 42 |
| 16. | உப்பு | ... 45 |
| 17. | காட்டில் போட்டி | ... 48 |
| 18. | வேலன் வீடு | ... 52 |
| 19. | கைத்தொழில் | ... 54 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| | படக்கதை (பயிற்சி) | ... 57 |
| 20. | நீர் நிலைகள் | ... 58 |
| 21. | வீண் பெருமை | ... 61 |
| 22. | பூனை | ... 64 |
| 23. | சிற்றூர் | ... 67 |
| 24. | கிழவியும் முயலும்—1 | ... 68 |
| 25. | என் கதை | ... 72 |
| 26. | இளமை நிகழ்ச்சி | ... 75 |
| 27. | புகைவண்டிப் பிரயாணம் | ... 79 |
| 28. | கிழவியும் முயலும்—2 | ... 83 |
| 29. | ஏன், ஏன், ஏன் ? | ... 86 |
| 30. | பரம்பொருள் | ... 89 |
| | செய்யுட் பாடம் | |
| | வெற்றி வேற்கை | ... 91 |
| | மூதுரை | ... 93 |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# புதிய திட்ட
# திராவிட மணி வாசகம்
## மூன்றும் புத்தகம்

## 1. தமிழ்த் திருநாடு




தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 1.

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் நிறைந்த இந்து ஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா! 2.

வடக்கில் இமயமலை பாப்பா! தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா! 3.

—பாரதியார்

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| திரு | உயர்வு | நிறைந்த | இமயமலை |
| கும்பிடு | தொழுது | புகழ்ந்து | குமரிமுனை |
| அமிழ்து | செல்வம் | கண்டாய் | ஆன்றோர் |

## பொருள் விளக்கம்

திரு - அழகிய, அமிழ்தம் - தேவர் உணவு, ஆன்றோர் - பெரியோர்.

## வினாக்கள்

1. தமிழ் நாட்டை ஏன் தாய் என்று வணங்க வேண்டும்?
2. தமிழ் எப்படிப்பட்ட மொழி?
3. இந்தியாவின் எல்லைகள் யாவை?



## 2. எங்கள் வீடு

1. இது எங்கள் வீடு. எங்கள் வீடு மாடி வீடு. எங்கள் வீடு பெரிய வீடு. எங்கள் வீட்டில் ஒரு கூடமும், ஐந்து அறைகளும் இருக்கின்றன; மாடியில் ஒரு கூடமும், மூன்று அறைகளும் இருக்கின்றன.

2. சமையல் அறை, பொருள்கள் வைக்கும் அறை, உண்ணும் கூடம் இவைகள் எல்லாம் கீழே இருக்கின்றன. என் தந்தையார் ஓர் அறையில் அவருடைய புத்தகங்களை அலமாரிகளில் அடுக்கி வைத்திருக்கிறார். மற்றோர் அறையில் அவர் அமர்ந்து படிப்பது, எழுதுவது ஆகியவற்றைச் செய்வார்.

3. மாடியில் உள்ள அறைகளை என் அண்ணனும் அக்காளும் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் மாடியில் உள்ள கூடத்தில் அமர்ந்து அமைதியாகப் பாடங்களைப் படிப்போம். எங்கள் தந்தையார் எழுதிக்கொண்டு இருக்கும்பொழுது அவர் அறைக்கு அருகில் செல்லமாட்டோம். எங்கள் தாயார் கூப்பிட்ட பிறகு கீழே இறங்கிச் செல்லுவோம்; கை கால்களைக் கழுவிக் கொண்டு உண்ணும் கூடத்திற்குப் போவோம். நாங்கள் எல்லோரும் ஒன்ருக இருந்து சாப்பிடுவோம்.

4. எங்கள் வீட்டின் பக்கத்தில் தோட்டம் போட்டிருக்கிறோம். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் வாழை மரங்கள் வளர்ந்து இருக்கின்றன; பூச் செடிகளும் நிறைய இருக்கின்றன. என் தங்கை பூக்களைப் பறித்து, சரமாகத் தொடுத்து, தலையில் சூடிக் கொள்வாள். எங்கள் வீட்டின் பின்புறம் ஒரு கிணறு இருக்கிறது. நாங்கள் அதிலிருந்து நீர் இறைப்போம்.

5. எங்கள் வீட்டை எங்கள் தாயார் எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்வார். எங்கள் வீடு காற்ருேட்டம் உள்ள வீடு; எப்பொழுதும் காற்று வீசிக்கொண்டே இருக்கும். அறைகள் எல்லாம் பெரியவையாகவும், வெளிச்

சம் உள்ளவையாகவும் இருக்கும். எங்கள் வீடு நல்ல வீடு.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| மாடி | கழுவி | தொடுத்து |
| உண்ணும் | பறித்து | அமர்ந்து |
| கூடம் | காற்று | இறைப்போம் |
| சமையல் | செல்ல | நிறைய |
| வளர்ந்து | மாட்டோம் | காற்ருேட்டம் |
| சூடி | கூப்பிட்ட | அடுக்கி |
| அலமாரி | சரமாக | வீசிக்கொண்டே |
| பொருள் | அமைதி | எப்பொழுதும் |

## விஞக்கள்

1. மாடியில் எத்தனே அறைகள் இருக்கின்றன ?
2. தந்தையார் புத்தகங்களே எங்கே வைத்து இருக்கிருர் ?
3. தோட்டத்தில் என்ன என்ன இருக்கின்றன ?

## பயிற்சி

கோடிட்ட இடங்களே நிரப்புக :—
1. மற்ருேர் அறையில் அவர் —— எழுதுவார்.
2. வீட்டின் —— தோட்டம் இருக்கிறது.
3. வீட்டின் —— கிணறு இருக்கிறது.
4. வீட்டை —— சுத்தமாக வைத்துக்கொள்வார்.

## இலக்கணம்

'எங்கள் வீடு நல்ல வீடு.'—இது ஒரு சொற்ருெடர். (சொல்+தொடர்.) இந்தச் சொற்ருெடர் ஒரு முழுக் கருத்தைத் தெரிவிக்கிறது. இதற்கு **வாக்கியம்** என்று பெயர். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ( . ) ஒரு **முற்றுப்புள்ளி** இடவேண்டும்.




## 3. எங்கள் ஊர்

1. இது எங்கள் ஊர். எங்கள் ஊரின் பெயர் போரூர். ஊருக்கு அருகில் பாலாறு என்னும் ஆறு ஓடுகிறது. ஊருக்குச் சிறிது தூரத்தில் சிறு குன்றுகள் இருக்கின்றன. ஊரின் நடுவில் கோவில் ஒன்று இருக்கிறது. கோவிலுக்கு அருகில் எங்கள் பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளியில்தான் நான் கல்வி கற்கிறேன்.

2. எங்கள் ஊரில் ஏறத்தாழ நானூறு வீடுகள் இருக்கின்றன. வீடுகள் வரிசை வரிசையாய்க் கட்டப்பட்டு இருக்கின்றன. எங்கள் ஊரில் நான்கு பெரிய தெருக்கள்

உள்ளன. ஒவ்வொரு தெருவிலும் ஓடுகள் பரப்பப்பட்ட வீடுகளும், ஓலையால் வேய்ந்த வீடுகளும் மிகுதியாய் உள்ளன. மாடி வீடுகள் சிலவே உண்டு. தெருக்கள் அகலமாய் இருக்கும். அவற்றின் இடை இடையே சில சிறிய சந்துகளும் இருக்கின்றன. சந்துகள் மிகவும் குறுகலானவை.

3. எங்கள் ஊரில் ஒரு மருத்துவச் சாலை இருக்கிறது. நோயாளிகளுக்கு அங்கே இலவசமாக மருந்து கொடுக்கிறார்கள். எங்கள் ஊர் தபால் நிலையம் மிகவும் சிறியது. எங்கள் ஊர் மருத்துவச்சாலையை அடுத்து ஊர் ஆட்சி மன்றம் இருக்கிறது. மன்றத் தலைவர் எங்கள் ஊருக்குப் பொதுவாக வேண்டும் நன்மைகளை எல்லாம் செய்து தருவார்.

4. எங்கள் ஊரில் பலர் பயிர்த்தொழில் செய்பவர்கள். ஊரைச் சுற்றிலும் செழிப்பான வயல்கள் இருக்கின்றன. வயல்களை உழுது நெல், கரும்பு, வாழை முதலியவைகளைப் பயிர் செய்வார்கள். பயிர்த்தொழில் புரிபவர்களைத் தவிர, கொல்லர், தச்சர், மண்பாண்டம் செய்வோர், துணி வெளுப்போர் ஆகியவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பார்கள். எங்கள் ஊரில் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| குன்று | நானூறு | கற்கிறேன் |
| குறுகல் | நோயாளி | ஏறத்தாழ |
| கல்வி | மருந்து | பரப்பப்பட்ட |
| உள்ளன | இலவசம் | மருத்துவச்சாலை |
| ஓடுகள் | பொதுவாக | தபால் நிலையம் |
| வேய்ந்த | நன்மை | ஆட்சிமன்றம் |
| இடை | செழிப்பான | புரிபவர் |
| ஒற்றுமை | வாழ்ந்து | சந்து |

## வினாக்கள்

1. பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறது ?
2. வீடுகள் எப்படி அமைந்து இருக்கின்றன ?
3. ஊர் ஆட்சி மன்றத் தலைவர் என்ன செய்து தருவார் ?
4. ஊரில் உள்ள தொழிலாளர்கள் யாவர் ?

## பயிற்சி

**1.** எதிர்ச் சொற்கள் :

அகலமாக × குறுகலாக
பெரியது × சிறியது
நன்மை × தீமை
ஒற்றுமை × வேற்றுமை

**2.** தெரிந்து கொள்க :

வரிசை வரிசையாய்
இடை இடையே

இவைபோல் வருவன அடுக்குத் தொடர்.

**3.** கோடிட்ட இடங்களை நிரப்புக :

(1) சந்துகள் மிகவும் ——.
(2) நோயாளிகளுக்கு —— மருந்து ——.
(3) ஊரைச் சுற்றிலும் —— வயல்கள் இருக்கின்றன.

# 4. எங்கள் ஊர்ச் சந்தை

1. எங்கள் ஊரில் வெள்ளிக்கிழமை தோறும் சந்தை கூடும். சந்தை கூடும் இடத்திற்குச் **சந்தைப் பேட்டை** என்பது பெயர். சந்தை கூடும் நாளில் எங்கள் ஊர் கலகலப்பாக இருக்கும். எங்கள் ஊருக்கு அருகில் உள்ள கிராமங்களிலிருந்து பலர் எங்கள் ஊருக்கு வருவார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டும் பொருள்களைச் சந்தையில் வாங்கிக் கொண்டு திரும்புவார்கள்.

2. சந்தைப் பேட்டை பெரும்பாலும் ஊருக்குச் சற்று வெளியேதான் இருக்கும். அங்கு நிழல் தரும் மரங்கள் இருக்கின்றன. சந்தை அன்று மரங்களின் அடியில் வியாபாரிகள் பல பண்டங்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்வார்கள்.

3. சந்தையில் அரிசி, நெல், சோளம், கம்பு, கேழ்வரகு முதலான பலவகைத் தானியங்கள் வாங்கலாம். வியாபாரிகள் தானியங்களைக் குவியலாகக் குவித்து வைத்து படியால் அளந்து விற்பார்கள். வேறு சில வியாபாரிகள் உப்பு, புளி, மிளகாய் போன்ற பண்டங்களை விற்பனை செய்வார்கள். மண்பாண்டங்கள் ஒருபுறம் அடுக்கப்பட்டு இருக்கும். கிராம மக்கள் தங்களுக்கு வேண்டும் சட்டி, பானை,

கலயம் முதலியவைகளை அங்கே வாங்கிக் கொள்வார்கள். காய் கறிகள், வாழை இலை முதலானவைகளும் சந்தையில் கிடைக்கும்.

4. எல்லாக் கிராமங்களிலும் பலவகைப் பண்டங்களும் கிடைக்கக்கூடிய கடைகள் இருப்பதில்லை. எல்லாக் கிராமங்களிலும் சந்தை கூடுவதும் இல்லை. சில பெரிய கிராமங்களில் மட்டுமே வாரம் ஒரு முறை சந்தை கூடும். அக்கம் பக்கத்தில் உள்ள சிற்றூர்களிலிருந்து மக்கள் அங்கே வந்து தங்களுக்கு வேண்டும் பொருள்களை வாங்கிப் போவார்கள்.

5. சந்தையில் எப்பொழுதும் சந்தடியாகவே இருக்கும். வாங்குவோர் சத்தமும், விற்பவர் சத்தமும் ஒரே இரைச்சலாகத் தோன்றும். சந்தை கூடும் நாளில் பலவகை மிட்டாய்கள் விற்பவர்களும் வருவார்கள். நாங்கள் மிட்டாய் வகைகளை வாங்கித் தின்போம். உங்கள் ஊரில் சந்தை கூடுவது உண்டா ? அப்படியானால் எந்தக் கிழமையில் சந்தை கூடுகிறது ?

### சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| பேட்டை | சிற்றூர் | படி | பெரும்பாலும் |
| குவியல் | மக்கள் | வேறு | கலகலப்பாக |
| குவித்து | வாங்குவோர் | முறை | இரைச்சல் |
| சத்தம் | விற்பவர் | சற்று | கேழ்வரகு |
| நிழல் | முதலான | சந்தடி | அளந்து |

## வினுக்கள்

1. சந்தை கூடும் இடத்திற்கு என்ன பெயர்?
2. சந்தையில் என்ன என்ன கிடைக்கும்?
3. வியாபாரிகள் தானியங்களை எப்படி விற்பனை செய்கிருர்கள்?

## பயிற்சி

**1. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—**

| | | |
|---|---|---|
| அருகில் | குவியல் | ஒருமுறை |
| நிழல் | அளந்து | பலவகை |
| விற்பனை | கிடைக்கும் | அக்கம்பக்கம் |

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக :—**

1. சந்தை கூடும் நாளில் எங்கள் ஊர் ——— இருக்கும்.
2. சந்தையில் ——— தரும் மரங்கள் ———.
3. சந்தையில் எப்பொழுதும் ——— இருக்கும்.

## இலக்கணம்

**கை, சந்தை—இவை சொற்கள்.** இவற்றுள் கை என்பது ஓர் எழுத்துத் தனித்து நின்று ஒரு பொருளைக் குறிக்கிறது. சந்தை என்பது பல எழுத்துக்கள் சேர்ந்து நின்று ஒரு பொருளைக் குறிக்கிறது. இவ்வாறு ஓர் எழுத்துத் தனித்து நின்றும், பல எழுத்துக்கள் சேர்ந்து நின்றும் ஒரு பொருளைக் குறிப்பது சொல் ஆகும்.



## 5. தங்கப் பறவை-1

1. முன்னெரு காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அரண்மனைத் தோட்டத்தில் வியக்கத்தக்க தங்க மாமரம் ஒன்று இருந்தது. அதில் நாள்தோறும் ஒரே ஒரு தங்க மாம்பழம் பழுத்துத் தொங்கும்; ஆனால் அதைப் பறித்து எடுக்க இயலாது. மறுநாட் காலையில் அப்பழம் காணுமல் போயிருக்கும். அரசனுக்கு இது பெரும் விந்தையாக இருந்தது.

2. ஒரு நாள் அரசன் தன் மூன்று குமாரர்களையும் அழைத்தான். "இதைக் கவர்ந்து செல்பவர் யார் என்பதைக் கண்டறிய

வேண்டும். நீ இன்று தோட்டத்தைக் காவல் செய்து எனக்கு அறிவிக்க வேண்டும்,'' என்று தன் மூத்த குமாரனிடம் கூறினர். அவனும் அதற்கு இசைந்தான். இரவில் தோட்டத்தில் காத்திருந்தான். ஆனல் நள்ளிரவில் உறங்கி விட்டான். வழக்கம்போல் மறுநாட் காலையில் தங்க மாம்பழம் காணப்படவில்லை.

3. மறுநாள் அரசன் தன் இரண்டாம் குமாரனைக் காவல் செய்யச் சொன்னர். அவனும் அவ்வாறே உறங்கி விட்டான். பழம் பறி போய்விட்டது. மூன்ரும் நாள், இளைய அரச குமாரன் தோட்டத்தில் காவல் செய்தான். அவன் மிகவும் கருத்துள்ளவன்; கண் உறங்காமல் விழித்திருந்தான்; நள்ளிரவில் பொன்னிறப் பறவை ஒன்று பழத்தைக் கொத்திச் செல்வதைக் கண்டு கொண்டான். உடனே வில்லை வளைத்து அதன்மீது குறிபார்த்து அம்பு எய்தான்; இருப்பினும் பறவை தப்பிச் சென்று விட்டது. ஆனல் அதன் இறகு ஒன்று கீழே விழுந்தது. மறுநாட் காலையில் அவன் அந்த இறகை அரசனிடம் கொடுத்து, நடந்ததைக் கூறினன்.

4. தங்கப் பறவையின் பொன்னிறமான இறகைக் கண்டதும் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ''இத்தகைய இறகை உடைய தங்கப் பறவையை எப்படியும்

கொண்டுவந்து விடவேண்டும். மகனே, நீயே அதனையும் கொண்டுவந்துவிடு,'' என்று தன் இளைய மகனைக் கேட்டுக்கொண்டார் அரசர். அரச குமாரனும் அதற்கு இசைந்தான். அவன் பயணம் புறப்பட்டு, ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தான். அங்கோரிடத்தில் பொன் நிறமான நரி ஒன்று உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| முன்னொரு | பறி | காவல் |
| அரண்மனை | அம்பு | அவ்வாறே |
| பறித்து | எய்தான் | கருத்தாக |
| இயலாது | அதனை | வியக்க |
| விந்தை | உறுதி | தொடங்கியது |
| அரசர் | மறுநாள் | நள்ளிரவு |
| இளைய | தக்க | இசைந்து |
| குமாரர் | காணுமல் | கண்டறிய |
| உறங்கி | அறிவிக்க | கவர்ந்து |

## வினாக்கள்

1. அரசனிடம் இருந்த வியக்கத்தக்க பொருள் என்ன?
2. அரசனுக்கு எது விந்தையாக இருந்தது?
3. இளையகுமாரன் தோட்டத்தில் கண்டது என்ன?
4. அவனுக்கு என்ன கிடைத்தது?
5. அரசர், இளைய குமாரனை என்ன கேட்டுக் கொண்டார்?



## 6. காலை நேரம்

காலை நேரம் ஆனதே
கண்ணு, கண்ணை விழித்திடு !
வேலை செய்ய யாவரும்
விழித்தெ ழுந்தார், பார்த்திடு. 1
எழுவ தற்கே ‘ கொக்கரோ ’
என்று சேவல் கூவுதே.
உழுவ தற்கே மாடுகள்
ஓட்டி உழவர் செல்கிறார். 2
மறைந்து இருளும் ஓடவே,
மலர்கள் யாவும் விரியவே,
விரைந்து வந்தான், சூரியன்.
விழித்தெ ழுந்து பார்த்திடு. 3
பசுமை யான புல்லிலே
பனிம றைந்து போனதே.
பசுவும் கன்று தடவியே
பாலை ஊட்டல் பார்த்திடு. 4

'சலச' லென்று பறவைகள்
சத்த மிட்டே வேகமாய்ப்
பலதி சைகள் ஓடுதல்
பார்க்க நீ எழுந்திரு. 5
எழுந்து காலைக் கடனையே
இனிது நீயும் முடித்திடு.
தொழுது புத்த கத்தினைத்
திறந்து பாடம் கற்றிடு. 6

—அழ. வள்ளியப்பா

## வினாக்கள்

1. காலையில் சேவல் கூவியவுடன் உழவர் என்ன செய்கிறார்கள் ?

2. சூரியன் தோன்றும்பொழுது என்ன என்ன நிகழ்கின்றன ?

3. காலையில் நீ காணும் காட்சிகளில் ஐந்தைத் தொகுத்து எழுது.

## இலக்கணம்

மனிதன், மாடு, மரம், பந்து—இவை பொருள்களின் பெயர்களைக் குறிக்கின்றன. இவை **பெயர்ச் சொற்கள்**. இவ்வாறு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும்.

பெயர்ச் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக :—

(1) கன்றுக்குட்டி துள்ளி ஓடும்.
(2) இது என் வீடு.
(3) பூக்கள் மலர்ந்தன.
(4) பறவைகள் பறந்து சென்றன.



## 7. மாணவ நண்பர்கள்

1. நான் மூன்ரும் வகுப்பில் படிக்கிறேன். என் வகுப்பில் முப்பது மாணவர்கள் படிக்கிருர்கள். அவர்களுள் நான்கு பேர்களுடன் நான் நெருங்கிப் பழகுவேன். அவர்கள் என்னிடம் எப்பொழுதும் அன்பாய் இருப்பார்கள். நாங்கள் ஐவரும் இணை பிரியாத நண்பர்கள்.

2. என் நண்பர்கள் பெயர் முறையே, இளங்கோ, அழகன், சுல்தான், தாவீது. என் பெயர் பாண்டியன். இளங்கோ, முதலியார் வகுப்பைச் சேர்ந்தவன் ; அழகன், அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவன் ; சுல்தான், ஒரு முஸ்லீம். தாவீது, கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவன். நான் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவன். நாங்கள் வெவ்வேறு மதங்களை

யும், வகுப்புக்களையும் சேர்ந்தவர்கள் ஆனு லும், எங்களுள் வேறுபாடு எண்ணுவதில்லை. எல்லோரும் உடன் பிறந்தவர்கள் போலவே கூடிப் பழகுவோம்.

3. நாங்கள் ஐவரும் எங்கள் வகுப்பில் ஒன்ருகவே அமர்வோம். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ளுவோம். இளங்கோ கணக்கில் வல்லவன். எங்களுக்கு விளங்காத கணக்குகள் போடும் முறையை அவன் எங்க ளுக்கு விளக்கிக் கூறுவான். எங்களுக்கு ஏதேனும் விளங்கா விட்டால் நாங்கள் அவனையே கேட்டுத் தெரிந்து கொள்வோம். அவன் மிகவும் நல்லவன். கணக்கில் வல்லவன் என்று அவன் கர்வம் கொள்ளமாட்டான்.

4. பள்ளிக்கூடம் விட்ட பின் நாங்கள் ஐவரும் கூடிப் பாடசாலை விளையாட்டு வெளி யில் விளையாடுவோம். தாவீது பந்து ஆட்டத் தில் சிறந்தவன். அவன் அடிக்கும் பந்தை எங்களால் தடுக்க முடியாது. சுல்தான், 'பார்' விளையாட்டில் வல்லவன். அவன் 'பாரில்' பல விதமான விளையாட்டுக்கள் விளையாடு வான். நாங்கள் விளையாடும் பொழுதும் நேர்மையாக நடந்து கொள்வோம். நாங்கள் எப்போதும் இப்படியே இணைபிரியாத நண்பர் களாக இருந்து வர விரும்புகிறோம்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| நெருங்கி | மதம் | முறை |
| முதலியார் | சிறந்தவன் | விரும்பு |
| வெவ்வேறு | இப்படியே | இணைபிரியாத |
| கர்வம் | நண்பர் | அந்தணர் |
| நேர்மை | கிறிஸ்துவர் | தெரிந்து |
| வல்லவன் | வேறுபாடு | அமர்வோம் |
| பழகு | விளக்கி | மாணவர் |
| முஸ்லீம் | தடுக்க | |

## வினாக்கள்

1. பாண்டியனின் நண்பர்கள் யாவர் ?
2. இளங்கோ எந்த வகுப்பைச் சேர்ந்தவன் ?
3. இவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் ?
4. இளங்கோ நண்பர்களுக்கு எப்படி உதவுவான் ?
5. தாவீது எந்த ஆட்டத்தில் சிறந்தவன் ?
6. சுல்தான் ஆடும் விளையாட்டு யாது ?
7. இந்த நண்பர்களின் விருப்பம் என்ன ?

## பயிற்சி

**1. எதிர்ச் சொற்கள் :—**

நெருங்கி × ஒதுங்கி
கூடி × பிரிந்து
நல்லவன் × கெட்டவன்
மூத்த × இளைய

**2. சொந்த வாக்கியங்களில் அமைக்க :—**

முப்பது சேர்ந்தவன் வேறுபாடு
நெருங்கி பழகுவோம் வல்லவன்



## 8. தென்னை மரம்

1. மரங்களில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் தென்னை மரமும் ஒன்று. தென்னைமரம் உயரமாக வளர்ந்து இருக்கும். அது ஏறக்குறைய ஐம்பது அல்லது அறுபது அடி உயரம் ஓங்கி வளரும்.

2. தென்னை மரம் மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். ஆதலால், ஆற்றின் கரைகளிலும், கடற்கரை ஓரங்களிலும் தென்னை மரங்களை மிகுதியாகக் காணலாம்.

3. தென்னை மரத்துக்குக் கிளைகள் கிடையா; ஆனால் மட்டைகள் உள்ளன. மட்டையின் இருபுறத்திலும் நேர் நேராக

நீண்ட ஓலைகள் இருக்கின்றன. தென்னை ஓலையை நீ பார்த்திருக்கிறாயா ?

4. தென்னை மரத்தை எப்படி வளர்க்கிறார்கள் தெரியுமா ? முற்றின தேங்காய்க்கு **நெற்று** என்பது பெயர். நெற்றான தேங்காயை மணற்பாங்கான நிலத்தில் நிமிர்த்திப் புதைத்து, நீர் ஊற்றுவார்கள். அந்த நெற்று, சில நாட்களில் முளைத்துச் சிறிய கன்று ஆகும். அதுவே **தென்னம் பிள்ளை** என்று சொல்லப்படும். அதன் பிறகு, தென்னம் பிள்ளையை எடுத்து, வேறோர் இடத்தில் குழி தோண்டி நடுவார்கள். அது உயர்ந்து மரமாக வளர்ந்து, ஐந்து ஆண்டுகளில் பலன் தரும்.

5. தென்னை மரத்தில் தேங்காய் குலை குலையாகக் காய்க்கும். முற்றாத காய்க்கு **இள நீர்** என்பது பெயர். இளநீர் மிகவும் இனிப்பாய் இருக்கும். வெயில் நேரத்தில் மக்கள் அதை விரும்பிக் குடிப்பார்கள். நீ இளநீர் அருந்தி இருக்கிறாயா ?

6. தென்னை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் பயன்படக்கூடியது ; அடி மரம் வீடு கட்ட விட்டமாக உதவும். தென்னை ஓலைகளைக் கீற்றாக முடைந்து வீடுகளுக்குக் கூரை வேய்வார்கள். தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுத்து, கயிறு திரிப்பார்கள்.

7. பருப்பு முற்றிய தேங்காய்க்குக்

கொப்பரை என்று பெயர். கொப்பரையைச் செக்கில் இட்டு ஆட்டித் தேங்காய் நெய் பிழிவார்கள். தேங்காய் நெய்யில் பல பலகாரங்கள் செய்வது உண்டு. சோப்பு, மெழுகு வர்த்தி முதலானவை செய்யவும் தேங்காய் நெய் பயன்படுகிறது. தேங்காய், தவிர்க்க முடியாத நமது உணவுப் பொருள்களுள் ஒன்ருகும்.

### சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| நிமிர்த்தி | தோண்டி | மட்டை | மணற்பாங்கான |
| வேரூர் | இளநீர் | பயன் | வேய்வார்கள் |
| முற்ருத | கொப்பரை | பலன் | திரிப்பார்கள் |
| ஆதலால் | ஓங்கி | நேர் | அவற்றுள் |
| புதைத்து | முடை | நார் | மெழுகுவர்த்தி |
| முற்றின | கயிறு | கீற்று | தவிர்க்க |
| நெற்று | அருந்தி | கட்டு | பிழிவார்கள் |

### வினுக்கள்

1. தென்னை மரம் எவ்வளவு உயரம் வளரும்?
2. தென்னை மரம் எங்கே செழித்து வளரும்?
3. தென்னை மரத்தை எப்படி வளர்க்கிருர்கள்?
4. 'இளநீர்' என்பது என்ன?
5. 'கொப்பரை' என்று எதற்குப் பெயர்?
6. தென்னையின் பயன்கள் யாவை?

### பயிற்சி

**1. தெரிந்து கொள்க :**

1. தேங்காய் குலை குலையாகக் காய்க்கிறது.
2. வாழைப்பழம் சீப்புச் சீப்பாக இருக்கிறது.

3. பூ கொத்துக் கொத்தாகப் பூக்கும்.
4. மாடுகள் மந்தை மந்தையாக மேயும்.

**2.** கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. தென்னை மரத்துக்குக் கிளைகள் ——.
2. முற்றின தேங்காய்க்கு —— என்று பெயர்.
3. நெற்றுத் தேங்காயை —— நிலத்தில் —— புதைப்பார்கள்.
4. தேங்காய் மட்டையிலிருந்து —— எடுத்து, —— திரிப்பார்கள்.
5. கொப்பரையைச் —— ஆட்டி தேங்காய் நெய் பிழிவார்கள்.

## இலக்கணம்

நடுகிறேன், அருந்துகிறேன்—இவை செயலைக் குறிக்கின்றன. இவை வினைச் சொற்கள். பொருளின் செயலைக் குறிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.

வினைச் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக :

1. இளங்கோ உணவு உண்கிறான்.
2. அழகன் பந்து விளையாடுகிறான்.
3. சுல்தான் கணக்குப் போடுகிறான்.
4. சுந்தரம் படம் வரைந்தான்.
5. நான் பள்ளிக்கூடம் சென்றேன்.
6. அவன் படம் வரைந்தான்.
7. பள்ளிக்குச் சென்றான் முருகன்.
8. கமலம் பாட்டுப் பாடுகிறாள்.
9. பசு புல்லை மேய்கிறது.
10. ஆடு தழையைத் தின்றது.
11. வரதன் பந்து ஆடுகிறான்.



## 9. ஔவையார்

1. நமது தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் பெண்பாலரும் சிலர் உண்டு. பெண்பாற் புலவருள் சிறந்து விளங்கியவர் **ஔவையார்** ஆவார்.

2. ஔவையார் கவி பாடுவதில் வல்லவர். அவருடைய பாடல்கள் சுவை மிகுந்தவை. கவி பாடிக் கொண்டே அவர் ஊர் ஊராகச் செல்வார். அவர் அரசர்களின் அரண்மனைகளிலும் பாடுவார்; ஏழைகளின் குடிசைகளிலும் பாடுவார். அரண்மனை விருந்து கிடைத்தாலும், ஏழைகளின் கூழ் கிடைத்தாலும் அவர் மகிழ்ச்சியோடு உண்பார்.

3. ஔவையார் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு உடையவர். ஏழை, பணக்காரர்

என்ற வேற்றுமை அவருக்கு இல்லை. தமது கவித்திறமையால் அவர் ஏழைகளையும் செல்வர் ஆக்குவார். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப் புகழாதவர் எவரும் இல்லை.

4. அக்காலத்தில் **அதியமான்** என்னும் அரசன் தகடூரை ஆண்டு வந்தான். ஔவையார் பல மாதங்கள் அவன் அரண் மனையில் தங்கி அவனோடு வாழ்ந்து வந்தார். ஔவையார் அவனுக்கு உயிர்த்தோழராக விளங்கினார்.

5. அதியமானுக்கு ஒருமுறை விந்தை யான நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அந்தக் கனியைப் புசிப்பவர் நெடுங்காலம் வாழலாம். அதியமான் அந்தக் கனியைத் தான் உண்ணவில்லை. 'ஔவையாரே இதை உண் பதற்கு ஏற்றவர். அவர் நீண்டநாள் வாழ்ந் தால், தமிழருக்கும் தமிழுக்கும் நன்மை உண்டாகும்,' என்று அவன் கருதினான்.

6. ஆதலால், அந்தக் கனியை அதிய மான் ஔவையாருக்கு அன்புடன் அளித் தான்; ஆனால் அதன் சிறப்பை அவரிடம் கூறவில்லை. ஔவையார் கனியைப் புசித்த பிறகு உண்மையைக் கூறினான். ஔவையார் மனம் மகிழ்ந்து அவன் அன்பைப் பாராட் டினார்; அவரை மனமார வாழ்த்தினார்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| பெண்பால் | நெடுங்காலம் | உயிர் |
| செல்வர் | ஏற்றவர் | திறமை |
| விளங்கி | பணக்காரர் | உண்பதற்கு |
| புகழாதவர் | வேற்றுமை | மனமார |
| புசிப்பவர் | கருதினன் | அளித்தான் |
| புலவர் | கூழ் | வாழ்த்தினர் |
| வாழ்ந்து | கவி | குடிசை |

## வினுக்கள்

1. ஔவையார் என்பவர் யார்?
2. அவர் எப்படிப்பட்ட குணம் உடையவர்?
3. நெல்லிக்கனியை அதியமான் ஏன் ஔவை யாருக்கு அளித்தான்?

## பயிற்சி

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

| | | |
|---|---|---|
| புலவர் | சிலர் | தங்கி |
| உயிர்த்தோழன் | மிகுந்தவை | ஆக்குவார் |

## இலக்கணம்

அதியமான், முருகன், கண்ணன்—இவை ஆண் களின் பெயர்கள்.

ஔவையார், வள்ளி, இலக்குமி—இவை பெண் களின் பெயர்கள்.

ஆண்களின் பெயர்களைக் குறிப்பன ஆண்பால் பெயர்கள் என்று சொல்லப்படும்.

பெண்களின் பெயர்களைக் குறிப்பன பெண்பால் பெயர்கள் என்று சொல்லப்படும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஆண்பால், பெண்பால் பெயர்களை எடுத்து எழுதுக :

1. சுந்தரம் பள்ளிக்குச் சென்றான்.
2. கண்ணகி கோலம் போடுகிறாள்.
3. பார்வதி பாடம் படிக்கிறாள்.
4. குமரன் பந்து ஆடுகிறான்.
5. மங்கை வேலை செய்கிறாள்.

# படக் கதை

## பயிற்சி

I. எதிர்ப் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்த்துக் கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை கூறுக :

1. முதல் படத்தில் நீ என்ன என்ன பார்க்கிருய்?
2. இரண்டாம் படத்தில் நீ காண்பது என்ன ?
3. நான்காம் படத்தில் சிங்கம் எங்கு இருக்கிறது ?
4. ஐந்தாம் படத்தில் சுண்டெலி என்ன செய்கிறது ?
5. இந்தக் கதைக்கு என்ன தலைப்புக் கொடுப்பாய் ?

II. கீழ்க்காணும் சொற்களை ஏற்றவாறு அமைத்து வாக்கியங்களாக எழுதுக.

1. வீடு எங்கள் இது.
2. அங்கு தரும் இருக்கின்றன மரங்கள் நிழல்.
3. வாங்கித் தின்போம் வகைகளை மிட்டாய் நாங்கள்.
4. ஒன்ருக சாப்பிடுவோம் எல்லோரும் நாங்கள் இருந்து.
5. எங்கள் பெரிய வீடு வீடு.
6. அந்தப் படிக்கிறேன் பள்ளிக்கூடத்தில் நான்.
7. சிறியது ஊர் தபால் எங்கள் நிலையம்.




## 10. திசைகள்

1. காலையில் சூரியன் தோன்றும் திசை **கிழக்கு** என்று சொல்லப்படும். மாலையில் சூரியன் மறையும் திசை **மேற்கு** எனப்படும். கிழக்கிற்கு நேர் எதிர்த் திசை மேற்கு.

2. சூரியன் தோன்றும் திசை கிழக்கு என்பது உனக்குத் தெரியும். காலையில் சூரியன் தோன்றும்போது நீ சூரியனைப் பார்த்து நில். இப்பொழுது உனக்கு முன் பக்கம் இருக்கும் திசை கிழக்கு; உனக்குப் பின்புறம் உள்ள திசை மேற்கு. படத்தில் காட்டியபடி உன் கைகள் இரண்டையும் இரு பக்கங்களிலும் நீட்டிக் கொள். உன் வலக்கைப் புறம் உள்ள திசை **தெற்கு**; உன் இடக்கைப்

புறம் உள்ள திசை **வடக்கு**. தெற்கிற்கு நேர் எதிர்த் திசை வடக்கு. இப்பொழுது நீ நான்கு திசைகளையும் தெரிந்து கொண்டாய் அல்லவா?

3. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு இவை நான்கும் அடிப்படையான திசைகள் ஆகும். இந்த நான்கு திசைகளைத் தவிர, மேலும் நான்கு திசைகள் இருக்கின்றன. அவற்றையும் தெரிந்துகொள்.

4. கிழக்குத் திசைக்கும் தெற்குத் திசைக்கும் இடையில் இருக்கும் மூலை **தென் கிழக்கு** என்று சொல்லப்படும். தெற்கிற்கும் மேற்கிற்கும் இடையில் உள்ள மூலை **தென் மேற்கு** என்று கூறப்படும். மேற்குத் திசைக்கும் வடக்குத் திசைக்கும் இடையே உள்ள மூலை **வடமேற்கு** எனப்படும். வடக்குத் திசைக்கும் கிழக்குத் திசைக்கும் இடையே உள்ள மூலை **வடகிழக்கு** எனப்படும். இப்பொழுது எட்டுத் திசைகளையும் தெரிந்து கொண்டாயா? இவை **எண் திசைகள்** என்று சொல்லப்படும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| கிழக்கு | தென்கிழக்கு | அடிப்படை |
| மேற்கு | வடமேற்கு | எனப்படும் |
| தெற்கு | தென்மேற்கு | எண்திசைகள் |
| வடக்கு | வடகிழக்கு | மூலை |
| இடையே | மேலும் | எதிர் |

## வினுக்கள்

1. சூரியன் தோன்றும் திசை யாது? மறையும் திசை யாது?

2. கிழக்குத் திசைக்கு நேர் எதிர்த்திசை எது?

3. சூரியனைப் பார்த்து நின்ருல் உன் வலக்கைப் பக்கம் என்ன திசை?

4. அடிப்படையான திசைகள் யாவை?

5. வடகிழக்கு என்று எதைக் கூறுகிரேம்?

## பயிற்சி

இணைத்து எழுதுக :—

| | | |
|---|---|---|
| வடக்கிற்கு<br>தென்மேற்கிற்கு<br>வடமேற்கிற்கு | எதிர்த்திசை | தென்கிழக்கு<br>தெற்கு<br>வடகிழக்கு |

## இலக்கணம்

| ஒன்று | பல |
|---|---|
| மரம் | மரங்கள் |
| பூ | பூக்கள் |
| பாடல் | பாடல்கள் |
| திசை | திசைகள் |
| குணம் | குணங்கள் |

இவை பெயர்ச் சொற்கள். முதல் வரிசையில் உள்ளவை ஒன்றைக் குறிக்கின்றன; அவை ஒருமைச் சொற்களாம். இரண்டாம் வரிசையில் உள்ளவை பல வற்றைக் (ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக்) குறிக்கின்றன. அவை பன்மைச் சொற்களாம்.

'எங்கள் வீடு' என்னும் இரண்டாம் பாடத்தி லிருந்து பன்மைச் சொற்கள் பத்து எடுத்து எழுது.



## 11. தங்கப் பறவை–2

1. பொன்னிறமான நரி அரச குமாரனை நோக்கி, "அப்பா, அரச குமாரா! நான் உனக்கு உதவி செய்வேன். நான் சொல்லு கிறபடி நீ கருத்தாக நடந்து கொண்டால் உனக்குத் தங்கப் பறவையும், மற்றும் பல விந்தைப் பொருள்களும் கிடைக் கும்," என்று கூறியது. அரசகுமாரன் அதற்கு வணக்கம் செலுத்தி, தான் அவ்வாறு நடப்பதாக உறுதி கூறினான்.

2. இளைய அரச குமாரனை, பொன்னிற நரி தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு பறந்து சென்றுகொண்டே இருந்தது. நீண்ட நேரம் கழித்து ஓர் அரண்மனையின் எதிரில் நின்றது. அரச குமாரனைக் கீழே இறக்கி விட்டு, "அரச குமாரா! நீ இன்று இரவு இந்த அரண்மனைக்குள் செல்லவேண்டும்.

அங்கு இளவரசி உனக்காகக் காத்திருப்பாள். அவள் உனக்குத் தங்கக் குதிரை ஒன்று அளிப்பாள். அதன்மீது இளவரசியையும் ஏற்றிக்கொண்டு நீ நேரே இங்கு வந்துவிடு,'' என்றது. அரச குமாரனும் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டான்.

3. அன்று இரவு நரி சொல்லிக்கொடுத்த படியே அரச குமாரன் செய்தான். இளவரசி அவனுக்குத் தங்கக் குதிரையை அளித்தாள். இளவரசியையும் ஏற்றிக் கொண்டு அரச குமாரன் வெளியே வந்து சேர்ந்தான்.

4. இளவரசியையும் அரசகுமாரனையும் கண்ட நரி மகிழ்ச்சி அடைந்தது. நரியைப் பார்த்ததும் இளவரசி கீழே குதித்து, அதைத் தடவிக் கொடுத்தாள். என்ன விந்தை! அவ் விடத்தில் அழகான அரச குமாரன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

5. "அரச குமாரா! இவர் என் தமக்கை யார். நான் செய்த ஒரு பிழைக்காக நரி உரு எடுக்க நேர்ந்தது. உன் உதவியால் நான் என் பழைய மனித உருவம் பெற்றேன். அக்கா! இவர் மிகவும் நல்லவர். இவர் உன் னுடைய தங்கப் பறவையை நாடி வந்திருக் கிறார். அதை நீ இவருக்கு அளித்து, இவரையே மணந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ் வாயாக!'' என்றான் புதிய அரச குமாரன்.

6. இளவரசி தன் தம்பி கூறியதற்கு இசைந்தாள். தங்கப் பறவையை எடுத்து வந்து இளைய அரச குமாரனிடம் கொடுத்தாள்; தன் தம்பியிடம் விடை பெற்றுக் கொண்டாள். இளைய அரச குமாரன், தங்கக் குதிரையின்மீது இளவரசியையும் ஏற்றிக் கொண்டு, தங்கப் பறவையுடன் தன் நாடு நோக்கிச் சென்றான்.

7. இளவரசன் சில நாட்களில் தன் அரண்மனையை அடைந்தான். அவனைக் கண்டு அரசன் மனம் மகிழ்ந்தான். இளவரசிக்கும் இளைய அரசகுமாரனுக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

### சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| இளவரசி | பிழை | ஏற்பட்டிருந்த |
| குதித்து | நாடி | நேர்ந்தது |
| தடவி | மணந்து | வாழ்வாய் |
| உருவம் | பொன் | மறைந்து |
| தமக்கை | விடை | காத்திரு |
| உதவியால் | நோக்கி | திருமணம் |

### வினாக்கள்

1. அரண்மனை எதிரில் நரி, அரசகுமாரனுக்குச் சொல்லியது என்ன?
2. இளவரசி அவனுக்கு என்ன அளித்தாள்?
3. நரி உருவில் இருந்தவன் யார்?
4. இளவரசன் தங்கப் பறவையை எவ்வாறு அடைந்தான்?



## 12. நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா! 1.

உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று—வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா!
மெல்ல வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா! 2.

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதடா!—ஓடிப்
போய் அதைக் கௌவியே சென்றதடா! 3.

—தேசிக விநாயகம் பிள்ளை

## வினாக்கள்

1. சுண்டெலி பானையுள் எப்படிப் புகுந்தது?
2. பானைக்குள் அது என்ன செய்தது?
3. சுண்டெலியால் ஏன் வெளியே வர முடியவில்லை?
4. பானையைத் திறந்ததும் சுண்டெலிக்கு நேர்ந்த முடிவு என்ன?
5. இப்பாடலினின்றும் நீ அறிந்து கொள்ளும் நீதி என்ன?

## இலக்கணம்

**1.** கீழ்க்காணும் வாக்கியங்களில் வந்துள்ள ஒருமை, பன்மைகளைத் தனித்தனியே எடுத்து எழுதுக :—

(1) பசுக்கள் வந்தன.
(2) பானை வாங்கினான்.
(3) பூனை வந்தது.
(4) பையன்கள் வந்தார்கள்.

**2.** ஆண்பால், பெண்பால்களை எடுத்து எழுதுக :—

(1) பெண்கள் மலர் தொடுக்கிறார்கள்.
(2) பாண்டியன் பள்ளிக்கு வந்தான்.
(3) தமிழரசி பாட்டுப் பாடுகிறாள்.
(4) ஆசிரியர் படம் வரைகிறார்.
(5) கலாவல்லி பூ வேலை செய்கிறாள்.



## 13. எங்கள் கிராம ஆட்சி

**சுந்தரம் :** அப்பா, நீங்கள் சாவடியில் மணியக்காரரிடம் பணம் கொடுத்தீர்களே, அது எதற்காக?

**தந்தை :** நமது நிலங்களுக்கு வரி செலுத்த வேண்டும் அல்லவா? அந்த வரிப் பணத்தையே அவரிடம் செலுத்தினேன்.

**சுந்த. :** அதை ஏன் இவரிடம் செலுத்தி னீர்கள் ?

**தந். :** வரிப் பணத்தை நம்மிடமிருந்து வாங்குவதற்காக அரசாங்கத்தார் மணியக்

காரரை அமர்த்தி யிருக்கிறார்கள். அவர் கிராம மக்களிடமிருந்து வரிப் பணத்தை வாங்கி, அரசாங்கத்திற்கு அனுப்பிவிடுவார்.

**சுந்த.** : நாம் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

**தந்.** : அவருக்கு உதவியாகக் **கணக்கப் பிள்ளை** இருக்கிறார். அவர் நாம் செலுத்த வேண்டும் வரிப்பணம் எவ்வளவு என்று கணக்கு வைத்திருப்பார்.

**சுந்த.** : மணியக்காரருக்கு வரி வாங்குவது தவிர வேறு வேலைகள் உண்டா?

**தந்.** : மணியக்காரர் கிராமத்தின் தலைவர். அவருக்கு வேறு வேலைகளும் உண்டு. கிராமத்தில் நடக்கும் சிறு சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பார்; கலகங்கள் நடந்தால் அடக்குவார்; கிராமத்தின் பிறப்பு இறப்புக்களைக் குறித்து வைப்பார். இவருக்குக் **கிராம முனிசீபு** என்னும் பெயரும் உண்டு.

**சுந்த.** : கணக்கப்பிள்ளையின் வேலை என்ன, அப்பா?

**தந்.** : ஒவ்வொருவரும் செலுத்த வேண்டும் வரிப்பணம் எவ்வளவு என்று கணக்கு வைத்துக் கொள்வார்; நிலங்களை அளந்து குறித்து வைப்பார். மேலும், மணியக்காரருக்கு உதவியான எல்லா வேலைகளையும் செய்

வார். இவர்கள் இருவரும் **கிராம அதிகாரிகள்** எனப்படுவார்கள்.

சுந்த.: இவர்களைத் தவிர, கிராம ஆட்சியைச் சேர்ந்தவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா, அப்பா?

தந்.: தலையாரி, வெட்டியான், நீர்க்கட்டி என்னும் ஊழியர்கள் இருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் இடும் கட்டளைகளை இவர்கள் நிறைவேற்றுவார்கள். இவர்கள் எல்லோரும் **கிராம ஊழியர்கள்.** இவர்கள் எல்லோரும் அரசாங்கத்தாரால் அமர்த்தப்பட்டவர்கள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| சாவடி | ஊழியர் | கலகம் |
| அமர்த்தி | பிறப்பு | வரி |
| சச்சரவு | விவரம் | மணியக்காரர் |
| இறப்பு | அளக்க | கணக்கப்பிள்ளை |
| குறித்து | சண்டை | தலையாரி |
| அதிகாரி | கட்டளை | வெட்டியான் |
| நிறைவேற்றி | தவிர | நீர்க்கட்டி |
| அரசாங்கம் | செலுத்த | அடக்குவார் |

## வினாக்கள்

1. மணியக்காரரை யார் அமர்த்தியிருக்கிறார்கள்?
2. மணியக்காரர் வரிப்பணத்தை என்ன செய்வார்?
3. மணியக்காரரின் வேலைகள் யாவை?
4. கணக்கப்பிள்ளையின் வேலைகள் யாவை?
5. கிராம அதிகாரிகள் யாவர்? கிராம ஊழியர்கள் யாவர்?



## 14. பாரதியார்

1. எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரம் என்னும் கிராமத்தில் பாரதியார் பிறந்தார். இவரது முழுப் பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்பது. சின்னசாமி ஐயர் என்பவர் இவர் தந்தையார்; இலக்குமி அம்மையார் இவர் தாயார்.

2. பாரதியார் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்; தமிழில் கவிபாடும் திறமை பெற்ருர். இவர் எப்பொழுதும் படித்துக்கொண்டும், எழுதிக் கொண்டும், கவி பாடிக் கொண்டும் இருப்பார்.

3. பதினைந்தாவது வயதில் இவருக்கும் செல்லம்மாள் என்னும் பெண்மணிக்கும் திரு மணம் நடந்தது. திருமணம் முடிந்த பின்பு, இவர் தந்தையார் காலமானார். காசியில் பாரதி யாரின் அத்தையார் ஒருவர் இருந்தார். பாரதி யார் அங்கே சென்று அவருடன் சில காலம் இருந்தார்.

4. பாரதியார் தமது இருபதாவது வய தில் எட்டையபுரத்திற்குத் திரும்பினார். எட் டையபுரத்து அரசர் இவரை அன்புடன் ஆத ரித்தார். பின்பு, பாரதியார் சிலகாலம் மதுரை யில் தமிழ் ஆசிரியராய் வேலை செய்தார். பின்பு அதைவிட்டுச் சென்னைக்குச் சென்றார். அங்கே இவர் நாட்டின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து உழைக்கலானார். அரசாங்கத்தார் இவரைச் சிறையில் வைக்க எண்ணினர். அதை அறிந்த பாரதியார், புதுச்சேரிக்குச் சென்று, அங்குச் சில காலம் வசித்து வந்தார்.

5. சில ஆண்டுகளுக்குப் பிறகு, பாரதி யார் மீண்டும் சென்னைக்குத் திரும்பினார்; ‘சுதேசமித்திரன்’ என்னும் நாளேட்டின் துணை ஆசிரியராய் அமர்ந்தார். அந்த நாளேட்டின் வாயிலாக அவர் பல பாடல்களை யும் கதைகளையும் எழுதி வெளியிட்டார். பாரதியார் தமது முப்பத்து ஒன்பதாவது வய தில் காலமானார்.

6. பாரதியார் சிறந்த தமிழ்க் கவிஞர்: நாட்டுப் பற்று மிகுந்தவர்; தன்னலம் கருதாத தன்மை வாய்ந்தவர். இவருடைய பாடல்கள் இவருக்குப் பெரும் புகழை அளித்துள்ளன. தமிழ் மக்கள் இவருடைய கவிதைகளைப் படித்துப் பயன் பெறுகின்றனர். இவரை என்றும் நினைவு கொள்ளுமாறு எட்டையபுரத்தில் ஒரு மண்டபமும் நூல் நிலையமும் அமைத்துள்ளனர்; ஆண்டுதோறும் இவர் நாளைத் திருநாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

### சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| கவிஞர் | புகழ் | வாய்ந்தவர் |
| கவிதை | தன்மை | காலமானுர் |
| மாவட்டம் | சிறை | வாயிலாக |
| தொல்லை | துணை | தன்னலம் |
| பரவி | மொழி | ஆதரித்தார் |
| திறமை | உழைக்க | பெண்மணி |
| நாளேடு | பற்று | திருநாள் |
| ஆங்கிலம் | மீண்டும் | தேர்ந்தார் |

### வினுக்கள்

1. பாரதியாரின் முழுப் பெயர் என்ன ?
2. பாரதியார் பிறந்த இடம் எங்குள்ளது ?
3. பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லக் காரணம் என்ன ?
4. பாரதியார் சென்னையில் என்ன வேலை பார்த்தார்?
5. பாரதியாரின் குணச் சிறப்புக்கள் யாவை ?
6. பாரதியாரை என்றும் நினைவுகொள்ளுமாறு என்ன செய்திருக்கிருர்கள் ?

## 15. உங்கள் கடமை

1. பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொரு நாளிலும் பெரும்பகுதி நேரத்தை உங்கள் வீட்டில் கழிக்கிறீர்கள்; உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுடன் பழகுகிறீர்கள். நம்மைப் பெற்று வளர்க்கும் தாயும் தந்தையும் நாம் தொழும் கடவுளுக்கு ஒப்பானவர்கள். அவர்கள் இடும் கட்டளைகளுக்கு நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவர்கள் வார்த்தையை நீங்கள் ஒருபோதும் தட்டலாகாது. அவர்களிடம் மிகவும் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். உடன் பிறந்தவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ள யாவரும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருத்தல் வேண்டும்.

2. பள்ளிக்கூடத்தில் நீங்கள் உங்கள் வகுப்பு மாணவர்களுடன் நெருங்கிப் பழகுகிறீர்கள். நீங்கள் அவர்கள் எல்லோரையும் உங்கள் உடன் பிறந்தவர்கள் போல் கருத வேண்டும். அவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும். மாணவர்களுள் ஏழை, பணக்காரன், உயர் குலம், தாழ் குலம் என்னும் வேறுபாடு கருதக் கூடாது. எல்லோரும் ஒரே குடும்பத்துப் பிள்ளைகளைப் போல் பழக வேண்டும். படிப்பில் பின்தங்கியவர்களை

ஏளனம் செய்யக் கூடாது. மாணவர்கள் ஒரு வருக்கு ஒருவர் உதவியாக இருக்கவேண்டும்.

3. உங்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரைத் தெய்வம் போல் கருதவேண்டும். ஆசிரியர் எப்பொழுதும் உங்கள் முன்னேற் றத்திலேயே கருத்தாக இருக்கிறார். அவரிடம் மிகவும் பணிவாக நடந்துகொள்ள வேண்டும். அவர் பாடம் கற்பிக்கும்பொழுது மிகவும் கருத்தாகக் கவனிக்க வேண்டும். ஆசிரியர் மனம் வருந்தும்படி நீங்கள் ஒருபொழுதும் நடந்துகொள்ளக் கூடாது.

4. உங்கள் நண்பர்களுடன் நீங்கள் விளையாடும்பொழுது நேர்மையைக் கடைப் பிடிக்க வேண்டும். விளையாட்டில் தோல்வி அடைந்தவர்களைக் கேலி செய்தல் கூடாது.

5. மேலே கூறியவை யெல்லாம் நீங்கள் மேற்கொள்ள வேண்டும் கடமைகளாம். நீங்கள் இவற்றிலிருந்து ஒருபொழுதும் தவற லாகாது.

**சொற்களஞ்சியம்**

| | | |
|---|---|---|
| ஒப்பானவர் | பழகு | பெரும்பகுதி |
| கற்பிக்கும் | மனம் | கழிக்கிறீர்கள் |
| கருத்தாக | கேலி | கீழ்ப்படிந்து |
| பாராட்ட | தட்டல் | முன்னேற்றம் |
| ஏளனம் | நேர்மை | கடைப்பிடிக்க |
| தோல்வி | இடும் | தவறலாகாது |
| தொழும் | கடமை | பின் தங்கிய |
| கடவுள் | தெய்வம் | மேற்கொள்ள |

## வினுக்கள்

1. உங்கள் பெற்ருேரிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ?

2. உடன் பிறந்தவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் ?

3. வகுப்பு மாணவர்களுடன் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் முறை யாது ?

4. ஆசிரியரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

## பயிற்சி

**1. தெரிந்து கொள்க :—**

எண்ண வேண்டும் — கருதவேண்டும்
கடைப்பிடிக்க — மேற்கொள்ள
ஏளனம் — கேலி
கருத்தாய் — கவனமாய்

**2. எதிர்ச் சொற்கள் :—**

வெற்றி × தோல்வி
உயர்வு × தாழ்வு

## இலக்கணம்

கீழுள்ளவற்றில் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பிரித்து எழுதுக :—

1. பாரதியார் கடிதம் எழுதினுர்.
2. இளங்கோ தேர்வில் வெற்றி பெற்ருன்.
3. என் வீடு கோவில் அருகில் இருக்கிறது.
4. அழகன் இன்று பள்ளிக்கு வரவில்லே.
5. ஆசிரியர் பாடம் கற்பிக்கிருர்.
6. மாணவர்கள் விளையாடுகிருர்கள்.



## 16. உப்பு

1. சுவை ஆறு வகைப்படும். அவற்றுள் **உவர்ப்பு** என்பது ஒன்ரும். உவர்ப்பு என்னும் சுவை **உப்பு** என்னும் பொருளில் உள்ளது. உப்பு இடாத உணவுப் பொருள்களை நாம் விரும்புவது இல்லை. 'உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே' என்பது நம் நாட்டுப் பழமொழியாம். அந்த உப்பு எங்கிருந்து, எப்படிக் கிடைக்கிறது ?

2. சுத்தமான உப்பு வெண்மை நிறமாய் இருக்கும். கடைகளில் பழுப்பு நிறமுள்ள உப்பும் இருக்கும். உப்பில் கலந்திருக்கும் அழுக்கினுல் அதற்குப் பழுப்பு நிறம் உண்டா

கிறது. உப்பை நீரில் கரைத்தால் இந்த அழுக்கைப் பிரித்து விடலாம்.

3. உப்பு பெரும்பாலும் கடல் நீரிலிருந்து எடுக்கப்படுகிறது. கடல் நீரைச் சிறு கால்வாய்கள் வழியாகப் பாத்திகளில் பாய்ச்சுவார்கள். அந்நீர் முழுவதும் வற்றின பின்பு, உப்பு, சிறு சிறு கற்களாகப் பாத்திகளில் படிந்திருக்கும். இவற்றை உலர்த்திக் குவித்து வைப்பார்கள். உப்புச் செய்யப்படும் இடத்திற்கு **உப்பளம்** என்பது பெயர்.

4. சில இடங்களில் நிலத்தை வெட்டியும் உப்பு எடுக்கிறார்கள். இந்த உப்பு, மண்ணோடும், வேறு பல பொருள்களோடும் கலந்திருக்கும். அப்பொருள்களைப் பிரித்து, சுத்தம் செய்வார்கள்.

5. நமது உடல் வளர்ச்சிக்கு உப்பு மிகவும் இன்றி அமையாததாம். அது செரிக்கும் திறனை மிகுதியாக அளிக்கும். உப்புச் சத்தினால் நம் உடல் எலும்புகள் உறுதி பெறுகின்றன. உப்பு, உணவுப் பொருள்களைக் கெடாமல் வைத்திருக்கப் பயன்படுகிறது. உப்புச் சேர்க்காவிடில் உணவுப் பொருள்கள் கெட்டு விடும். உப்புச் சேர்த்த ஊறுகாய் நெடுநாட்கள் கெடாமல் இருக்கும்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | குப்பை | படிந்து | ஊறுகாய் |
| கலந்து | உறுதி | இன்றி | பழுப்பு |
| கால்வாய் | திறன் | அமையாத | வற்றின |
| உலர்த்தி | சத்து | சேர்த்த | கெடாமல் |
| செரிக்கும் | இடாத | உப்பளம் | அழுக்கு |
| வளர்ச்சி | பாத்தி | எலும்பு | பிரிந்து |
| வெட்டி | கரை | குப்பை | பெறுகின்றன |

## வினக்கள்

1. உப்பைப் பற்றிய பழமொழி யாது?
2. சில வகை உப்பு பழுப்பு நிறமாய் இருப்பது எதனுல்?
3. கடல் நீரிலிருந்து உப்பு எவ்வாறு எடுக்கப்படுகிறது?
4. 'உப்பளம்' என்ருல் என்ன?
5. உப்பினுல் ஏற்படும் பயன்கள் யாவை?

## பயிற்சி

1. உப்பே தன் கதையைச் சொல்வது போலச் சுருக்கமாக எழுதுக.

2. உங்கள் ஊருக்கு அருகில் உப்பளம் இருந்தால் ஒரு முறை சென்று பாருங்கள்.

3. கோடிட்ட இடங்களே நிரப்புக :—
   (1) சுத்தமான உப்பு —— நிறமாய் ——.
   (2) கடல் —— சிறு —— வழியாகப் பாத்திகளில் விடுவார்கள்.
   (3) நிலத்தை —— உப்பு எடுக்கப்படுகிறது.
   (4) உப்பு —— திறனே மிகுதியாக ——.
   (5) உப்புச் சத்திஞல் உடல் —— பெறுகின்றன.
   (6) உப்புச் சேர்த்த ஊறுகாய் —— —— இருக்கும்.



## 17. காட்டில் போட்டி

1. ஒரு காட்டில் குரங்குக் குட்டி ஒன்று இருந்தது. அது மிகவும் குறும்புத்தனம் உள்ளது. ஒரு நாள் அது நீர் அருந்தக் குளத்திற்குச் சென்று கொண்டிருந்தது. வழியில் அது யானை ஒன்றைப் பார்த்தது; நடுங்கிக் கொண்டே குளத்தை நோக்கித் தாவிச் சென்றது. குரங்குக் குட்டி அந்தக் குளத்தில் நீர் யானை ஒன்று இருப்பதைக் கண்டது; ஒரு வேடிக்கை செய்ய எண்ணங் கொண்டது.

2. குரங்குக் குட்டி நீர் யானையைப் பார்த்து, "ஐயா, மிகுந்த வலிமை உள்ளவர் என்று பெருமை பாராட்டிக் கொள்கிறீரே, உம்மால் என்னுடன் போட்டி இட முடியுமா?" என்று கேலியாகக் கேட்டது. நீர்யானை இடி

முழக்கம் போல் சிரித்துக் கொண்டே "மிகச் சிறிய பிராணியாகிய நீயா என்னுடன் போட்டி யிட எண்ணுகிருய்? வேடிக்கைதான்! அப் படியே செய்வோம்," என்றது.

3. குரங்குக் குட்டி தலையை ஆட்டிக் கொண்டே, "இழுக்கும் பந்தயம் ஆடலாம். நீருள் மூழ்கியபடியே நீர் இழும்; நான் கரை யில் இருந்து இழுக்கிறேன். தோல்வியுற்றவர் மற்றவரை வணங்க வேண்டும்," என்றது. நீர்யானையும் இணங்கியது. குரங்கு வடக்கயிறு கொண்டுவரச் சென்றது.

4. குரங்குக் குட்டி நேரே யானை இருந்த இடத்திற்குப் போயிற்று; அதையும் போட்டி யிட அழைத்தது. சிரித்துக் கொண்டே யானை யும் இசைந்தது. குரங்குக் குட்டி வடக் கயிறும் கொண்டு வந்தது; யானையைக் குளக் கரைக்குக் கூட்டிச் சென்றது. வடக் கயிற் றின் ஒரு முனையை யானையிடம் கொடுத்தது. யானை ஒரு மரத்தின் பின்புறம் அமர்ந்து இழுக்க ஆயத்த மாகியது. குரங்கு மறை வாகக் குளத்தருகே சென்று நீர்யானையிடம் கயிற்றின் மற்ருெரு முனையைக் கொடுத்து, "இனி இழுக்கலாம்!" என்று உரக்கக் கூவி, பந்தயத்தைத் துவக்கி வைத்தது.

5. போட்டி நடைபெற்றுக் கொண்டே இருந்தது. மறுமுனையில் நீர்யானை இழுப்பது

யானைக்குத் தெரியாது; அதுபோலவே, யானை இழுப்பது நீர்யானைக்குத் தெரியாது. குரங்குக் குட்டி, இழுப்பதாகவே இரண்டும் எண்ணிக் கொண்டன. குரங்குக் குட்டி ஒரு மரத்தடியில் மறைவாக அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. நாள் முழுதும் இரண்டும் வெற்றி தோல்வி இன்றி வலித்து இழுத்துக் கொண்டே இருந்தன. இறுதியில் இரண்டும் களைத்துப் போய், கயிற்றை நழுவ விட்டு விழுந்து விட்டன.

6. குரங்கு மறைவிலிருந்து ஓடிவந்து யானையின் முன் நின்று 'கீச் கீச்' என்று கேலி செய்தது. யானை தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, வெட்கித் தலைகுனிந்து வணங்கிவிட்டுச் சென்றது. குரங்குக் குட்டி சிரித்துக் கொண்டே குளத்தருகே சென்றது. நீர்யானை மெல்ல மேலே வந்து கீழே விழுந்து புரண்டு குரங்குக் குட்டிக்கு வணக்கம் செலுத்தியது; நீருள் மூழ்கி மறைந்தது. குரங்குக் குட்டி கூத்தாடிக்கொண்டே தாவிச் சென்றது.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| வலிமை | குறும்பு | உற்றவர் | மற்றொரு |
| இடி | நடுங்கி | முழக்கம் | மறைவாக |
| முனை | உரக்க | வேடிக்கை | நடைபெற்று |
| கூவி | துவக்கி | வலித்து | கூத்தாடி |
| இறுதி | வெட்கி | பெருமை | தாவி |
| நழுவ | மெல்ல | நோக்கி | மூழ்கி |
| இனி | அருந்த | ஆயத்தம் | |

1,30,872
TB
031(B)
N58

## வினுக்கள்

1. குரங்குக் குட்டி நீர்யானையை என்ன கேட்டது?
2. நீர்யானை கூறிய பதில் யாது?
3. குரங்குக் குட்டி எவ்வாறு பந்தயம் வைத்தது?
4. உண்மையில் பந்தயம் யார் யாரிடையே நடந்தது?
5. அவை என்ன எண்ணிக்கொண்டன?
6. யானை, நீர்யானை இரண்டும் ஏன் குரங்குக் குட்டிக்கு வணக்கம் செலுத்தின?

## இலக்கணம்

### நிறுத்தக் குறிகள்

ஒவ்வொரு முழுவாக்கியத்தின் முடிவிலும் (.) முற்றுப் புள்ளி இடவேண்டும் என்று முன்பு தெரிந்துகொண்டாய்.

வாக்கியங்களின் இடையே சற்று நிறுத்திவிட்டு, பிறகு படிக்குமாறு பொருள் உள்ள சில இடங்களில் (,) **கால்புள்ளி** அமைத்திருக்கும். கால்புள்ளி இட்டிருக்கும் இடங்களில் ஒரு கண்ணிமைக்கும் நேரம் நிறுத்தி, பின்பு படிக்கத் தொடங்கவேண்டும்.

இவற்றைக் கவனி :—

ஐயா, மிகுந்த வலிமை உள்ளவரே.

யானை தன் தோல்வியை ஒப்புக்கொண்டு,
வணக்கம் செலுத்தியது.

பிறர் கூறியவற்றை அவர்கள் சொல்வது போலவே எடுத்து எழுதும்போது அவற்றின் தொடக்கத்திலும், முடிவிலும் (''—'') இக்குறிகளை இடவேண்டும். இதற்கு **மேற்கோள் குறி** என்று பெயர்.

இளங்கோ, அழகனைப் பார்த்து, '' நண்பா, இன்று நாம் பந்து ஆடுவோம்,'' என்று கூறினான்.

இந்தப் பாடத்தில் இவ்வாறு மேற்கோள் குறிகள் இட்டிருக்கும் பகுதிகளைப் படியுங்கள்.



## 18. வேலன் வீடு

வேலன் கட்டிய வீடும் இதுவே ;
வீட்டில் இருந்த மாவும் இதுவே ;
மாவைத் தின்னும் எலியும் இதுவே ;
எலியைக் கொல்லும் பூனையும் இதுவே ;
பூனையை வெருட்டும் நாயும் இதுவே ;
நாயை மிதிக்கும் பசுவும் இதுவே ;
பசுவைக் கறக்கும் பாவையும் இவளே ;
பாவையை மணக்கும் பாவலன் இவனே ;

பாவலன் வணங்கும் நாவலர் இவரே ;
நாவலர் விழிக்கும் சேவலும் இதுவே ;
சேவலே வளர்க்கும் சேவகன் இவனே ;
வேலன் கட்டிய வீட்டின் அருகே
வசிக்கும் சேவகன் இவனே ! இவனே !

—மதுரனர்.

## அருஞ்சொற் பொருள்

வெருட்டும் - பயமுறுத்தும், பாவை - பெண், பாவலன் - பாடல்கள் இயற்றும் கவிஞன், நாவலர் - கவிஞர் ; ஆசிரியர்.

## இலக்கணம்

1. ஒருமை, பன்மை சொற்களே வெவ்வேருக எடுத்து எழுதுக :—

| | | | |
|---|---|---|---|
| காய்கள் | செடிகள் | கொடி | ஏரிகள் |
| பழம் | கோவில் | இலைகள் | குட்டை |
| மலைகள் | கிணறு | ஆறு | மக்கள் |

2. பின்வரும் சொற்களேப் பொருத்தமான கட்டங்களில் எழுதுக :—

| | | |
|---|---|---|
| காய்கள் | குளித்தான் | மாணவன் |
| பாய்ச்சினுன் | முருகன் | ஏற்றம் |
| கிணறு | வைத்தான் | குழாய் |
| குட்டைகள் | வள்ளி | தொட்டி |
| கிராமம் | சிறுமிகள் | இலைகள் |

| பெயர்ச் சொல் | வினைச் சொல் | ஒருமை | பன்மை | ஆண் பால் | பெண் பால் |
|---|---|---|---|---|---|
| | | | | | |




## 19. கைத்தொழில்

1. நகரங்களில் பலவிதமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. நூல் நூற்கும் ஆலை, நெசவு ஆலை, சர்க்கரை ஆலை போன்ற தொழிற்சாலைகளில் பொருள்கள் எந்திரங்களின் உதவியினால் செய்யப்படுகின்றன. இவ்வாறு எந்திர உதவி இல்லாமல் கையினாலேயே செய்யப்படும் தொழிலுக்குக் **கைத்தொழில்** என்பது பெயர்.

2. கைத்தொழில்களில் கூடை முடைதலும் ஒரு தொழில் ஆகும். ஓலைகளாலும், மூங்கில்களாலும், பிரம்புகளாலும் கூடைகள் முடையலாம். தென்னை, பனை, ஈந்து முதலான

மரங்களின் ஓலைகளால், பெட்டி, கூடை முதலியவற்றை முடையலாம். ஓலைக் கூடைகள் நீண்ட நாள் பயன்பட மாட்டா. பிரம்புக் கூடைகள் உறுதியாய் இருக்கும்; நீண்ட நாள் உழைக்கும்.

3. பசுமையான மூங்கில்களை வெட்டி வந்து, அவற்றைக் கத்தியினால் பிளப்பார்கள். வேண்டும் அளவுக்குத் தகுந்தாற்போல் அப் பிளவுகளைக் கனமாகவும் இலேசாகவும் சீவுவார்கள். அவற்றால் பலவிதமான கூடைகள் முடைவார்கள்.

4. கூடை முடைபவர் முதலில் அடிப் பாகத்தை முடைவார். கூடையின் உருவத்திற்குத் தகுந்தாற்போல் அதன் அடிப் பாகத்தை அமைப்பார். முதலில் கனமான பிளவுகளைக் குறுக்கே கொடுத்து மேலும் கீழுமாக மாற்றி முடைவார். கடைசியில் மூலைகளை மடித்துக் கூடை ஆக்குவார்.

5. பிரம்பினாலும் கூடைகளை முடைவார்கள். மூங்கிற் பிளவுகளினால் பாய்களும், தட்டுகளும், கோழிக் கூண்டுகளும் செய்வதுண்டு. காய்கறிகள், பழங்கள் இவற்றை வைத்துக் கொள்ளத் தூக்குக் கூடைகளும் செய்வார்கள்.

6. புத்தகப் படிப்புடன் கைத்தொழில் பயிற்சியும் நமக்கு வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் ஏதேனும் கைத்தொழில்

ஒன்று கற்றுக் கொண்டால் அதனுல் நன்மை அடையலாம்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| தொழில் | ஆலே | முடை | தொழிற்சாலே |
| நகரம் | பிள | தகுந்த | சர்க்கரை |
| நூற்கும் | அளவு | உருவம் | மெல்லிய |
| எந்திரம் | சீவு | பரப்பு | அடையலாம் |
| பிரம்பு | தூக்கு | மடித்து | ஆக்குவார் |
| பசுமை | தட்டு | ஏதேனும் | மாணவர் |
| வெட்டி | அளவு | பயிற்சி | அமைப்பார் |

## விளுக்கள்

1. எவற்ருல் கூடைகள் முடையலாம் ?
2. மூங்கிலால் கூடை முடைவது எப்படி ?
3. கைத்தொழில் என்ருல் என்ன ?

## பயிற்சி

**1. கோடிட்ட இடங்களே நிரப்புக :**

1. ஓலேக் கூடைகள் ——— பயன்பட மாட்டா.
2. பிரம்புக் கூடைகள் ——— இருக்கும்.
3. முதலில் கூடையின் ——— முடைவார்கள்.
4. கடைசியில் ——— கூடை ஆக்குவர்.

**2. உச்சரிப்பைக் கவனிக்க :**

| | | | |
|---|---|---|---|
| எறும்பு | குறுகிய | வெறுப்பு | ஏறிஞன் |
| கரும்பு | குருடன் | விருப்பு | ஏரி நீர் |
| துரும்பு | திருடன் | நெருப்பு | கீரிப்பிள்ளே |

# படக் கதை

எதிர்ப்புறமுள்ள படங்களைப் பார்த்து, கீழ்க் காணும் கேள்விகளுக்கு விடை கூறுக :—

1. முதல் படத்தில் நீ என்ன காண்கிருய் ?

2. இரண்டாம் படத்தில் நாகம் என்ன செய்கிறது ?

3. மூன்றும் படத்தில் நரி காகத்திற்கு என்ன யோசனை சொல்லிற்று ?

4. நான்காம் படத்தில் காகம் என்ன செய்கிறது ?

5. அங்குக் காணப்படும் கட்டடம் என்ன என்று உனக்குத் தெரியுமா ?

6. ஐந்தாம் படத்தில் காகம் என்ன செய்கிறது ?

7. ஆரும் படத்திலிருந்து நீ அறிந்து கொள்வது என்ன ?

**மாதிரி :**

1. ஒரு மரத்தின் மேல் ஒரு காகம் கூடுகட்டியிருக்கிறது. அந்தக் கூட்டில் அது முட்டையிட்டிருக்கிறது. அந்த மரத்தில் ஒரு பொந்து இருக்கிறது. அந்தப் பொந்தில் ஒரு நாகம் இருக்கிறது. காகம் பறந்து வந்து கொண்டிருக்கிறது.

கீழ்க்காணும் குறிப்புக்களின் உதவிகொண்டு மற்றக் கேள்விகளுக்கு விடையளி :

நாகம்—முட்டை தின்கிறது—முத்துமாலை—காகம்—கௌவிச் செல்கிறது—அரண்மனை—சேவகர்கள் —பொந்தில்—நாகத்தை—கொன்றுர்கள்.



## 20. நீர் நிலைகள்

1. நாம் நமக்கு வேண்டும் நீரை ஆறு, ஏரி, குளம், கிணறு, குழாய் இவற்றிலிருந்து பெறுகிறோம். இவற்றுள் ஆறு, கால்வாய், ஓடை இவைகளில் நீர், நிலையாக நில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கின்றது. ஆனால், ஏரி, குளம், கிணறு, குட்டை இவற்றில் உள்ள நீர் அவ்வாறு ஓடாமல், நிலையாக இருக்கிறது. இவற்றை **நீர் நிலைகள்** என்று சொல்லுகிறோம்.

2. நீர் நிலைகளுள் மிகவும் பெரியது கடல். கடல்நீர் உவர்ப்பானது; அதனால் கடல்நீரை நாம் பயன் படுத்துவது இல்லை. நாம் பயன்படுத்தும் நீர் நிலைகளுள் பெரியது ஏரி. ஏரிகளுக்கு ஆறுகளிலிருந்து கால்வாய்

கள் வழியே நீரைக் கொண்டுவந்து தேக்கி வைப்பார்கள். பெரும்பாலும் ஏரிகள் மழை நீராலேயே நிரம்புகின்றன.

3. கிராமங்களில் **குளங்கள்** இருக்கும். சிறிய குளத்திற்குக் குட்டை என்று பெயர். இவையும் நீர் தேங்கி நிற்கும் நிலைகளாம். இவை மழை நீரால் நிரம்பும். வாய்க்கால் நீரைப் பாய்ச்சி, குளங்களை நிரப்பிக் கொள் வதும் உண்டு. கிராமங்களில் உள்ள மக்கள் குளங்களில் குளிப்பார்கள்; துணி துவைப் பார்கள். குளத்து நீரைக் குடி நீராகவும் பயன்படுத்துவது உண்டு. குட்டைகளில் உள்ள நீர் சுத்தமாக இராது.

4. நம் வீடுகளில் **கிணறுகள்** இருக் கின்றன. கிணற்று நீரையே நாம் நம் வீடு களில் பயன் படுத்துகிறோம். தோட்டங் களில் சில பெரிய கிணறுகள் உண்டு. இந்தக் கிணற்று நீரை ஏற்றம் கொண்டு இறைத்து, தோட்டங்களுக்குப் பாய்ச்சுவார்கள். மாடுகள் பூட்டிய கபிலை ஏற்றத்தாலும் நீர் இறைப்பார் கள்.

5. நகரங்களில் குழாய் வசதி இருக் கிறது. குழாயின் பிடியைத் திருப்பிவிட்டால் நீர் கொட்டுகிறது. ஓரிடத்தில் பெரிய தொட்டி அமைத்து, நீரைத் தேக்கி, சுத்தம் செய்து வைத்திருப்பார்கள். அங்கிருந்து குழாய்கள்

வழியாக நகரத்தின் பல பகுதிகளுக்கும் நீர் கொண்டு செல்லப்படும்.

6. நீர் நிலைகள் நமக்கு மிகவும் பயன் படக் கூடியவை. நாம் அவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| குழாய் | நிரம்பு | பெறுகிறோம் |
| ஓடை | நிரப்பி | இறைப்பார்கள் |
| நிலை | குடி நீர் | கால்வாய் |
| தேங்கி | கபிலை | திருப்பி |
| தேக்கி | வசதி | கொட்டு |
| இராது | பிடி | பகுதி |
| குட்டை | அதனால் | செல்லப்படும் |

## வினாக்கள்

1. நீர் நிலைகள் என்று எவற்றைக் கூறுகிறோம் ?
2. ஏரிக்கு நீர் எங்கிருந்து கிடைக்கிறது ?
3. குளங்களைக் கிராம மக்கள் எவ்வாறு பயன் படுத்துகிறார்கள் ?
4. தோட்டக் கிணறுகளிலிருந்து எப்படி நீர் பாய்ச்சுகிறார்கள் ?
5. குழாய்க்கு நீர் எங்கிருந்து வருகிறது ?

## பயிற்சி

**உச்சரிப்பைக் கவனி :**

| | | | |
|---|---|---|---|
| நீலம் | பழம் | மழை | தழை |
| நீளம் | பலம் | மலை | தலை |
| கிழி | பால் | குளம் | கழுதை |
| கிளி | பாழ் | குலம் | பளு |




## 21. வீண் பெருமை

1. வங்காளத்தில் **வித்தியாசாகரர்** என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பெரிய அறிஞர். ஒரு முறை அவர் புகை வண்டியில் மிதுனபுரிக்குச் சென்று கொண்டிருந்தார். வண்டியில் அவரோடு மாணவன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவன் ஆடம்பரமாக உடை அணிந்திருந்தான். வித்தியாசாகரர் மிகவும் எளிய உடையே உடுத்தி யிருந்தார். அந்த மாணவன் அவரை ஒரு கூலியாள் என்று கருதினுன்.

2. வண்டி மிதுனபுரியை அடைந்தது; வித்தியாசாகரர் இறங்கினுர்; அந்த மாணவ

னும் இறங்கினுன். மாணவனிடம் ஒரு சிறு பெட்டி இருந்தது. அவன் தானே அதைத் தூக்கிச் செல்வதை இழிவு என்று நினைத்தான்; அதற்காக ஒரு கூலியாளைத் தேடினுன். அங்கு ஒருவரும் தென்படவில்லை.

3. வித்தியாசாகரர் அவனைக் கவனித்தார். அவர் மாணவன் கருத்தை உணர்ந்து கொண்டார் ; அவனுக்கு நீதி புகட்ட எண்ணி, அந்த மாணவன் அருகில் சென்ருர் ; பெட்டியைத் தாம் எடுத்து வருவதாகக் கூறினுர். மாணவன் பெட்டியை அவரிடம் கொடுத்தான். அவர் அவனைப் பின்தொடர்ந்து சென்ருர். வீட்டை அடைந்ததும் மாணவன் அவருக்குக் கூலி கொடுக்க முன்வந்தான் ; அவர் கூலி வாங்க மறுத்துவிட்டார் ; ஆனுல், அவனுடைய முகவரியைத் தெரிந்துகொண்டார்.

4. மறுநாள் அம் மாணவனுக்கு ஓர் அழைப்புக் கடிதம் வந்தது. அது வித்தியா சாகரருக்கு அந்த நகரத்தார் அளிக்கும் சிறப்பு விழாவின் அழைப்பாகும். மாணவன் விழாப் பந்தலை அடைந்தான். அங்கு, அவன், தன் பெட்டியைத் தூக்கி வந்தவர் பூமாலைகள் சூடி மேடையில் அமர்ந்திருப்பதைக் கண்டான் ; அவரே வித்தியாசாகரர் என்று அறிந்து திடுக்கிட்டான் ; அவரை நேரே பார்க்கவும் அஞ்சி வெட்கம் அடைந்தான்.

5. வித்தியாசாகரர் அந்த மாணவனைப் பார்த்துவிட்டார். அவர் அவனை அன்போடு அருகில் அழைத்தார். ''தம்பி, நமது வேலையை நாமே செய்துகொள்வதில் இழிவு ஒன்றும் இல்லை. இதை நீ உணர வேண்டும்,'' என்று கூறினார். அம்மாணவன் அவரை வணங்கி, தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். அன்று முதல் அவன் வீண் பெருமையை ஒழித்தான்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| கூலி | வீண் | ஆடம்பரம் |
| இழிவு | பெருமை | மன்னிக்கும்படி |
| தென்பட | வெறுப்பு | முன்வந்து |
| கருத்து | மறுத்து | தொடர்ந்து |
| நீதி | எளிய | உணர்ந்து |
| புகட்ட | அஞ்சி | சிறப்பு விழா |
| முகவரி | ஒழி | திடுக்கிடு |
| உடுத்தி | அழைப்பு | அலைந்தான் |

## வினாக்கள்

1. வித்தியாசாகரர் யார்?
2. மாணவன் வண்டியில் ஏன் அவருடன் பேச விரும்பவில்லை?
3. மாணவனுக்கு நீதி புகட்ட வித்தியாசாகரர் எப்படி முன்வந்தார்?
4. விழாவுக்குச் சென்ற மாணவன் ஏன் திடுக்கிட்டான்?
5. வித்தியாசாகரர் கூறிய நீதி என்ன?



## 22. பூனே

1. பூனேயை நாம் நாள்தோறும் பார்க்கிறோம். பூனே பெரும்பாலும் வீடுகளில் நடமாடும் பிராணி. காடுகளில் வசிக்கும் பூனேகளும் உண்டு. பூனே, குட்டி போடும்; பால் கொடுத்துக் குட்டிகளே வளர்க்கும். அது ஒரே முறையில் நாலேந்து குட்டிகள் போடும். குட்டிகளிடம் பூனேக்கு மிக்க அன்பு உண்டு. அது, தன் குட்டிகளுக்கு வேளே தவருமல் பால் கொடுக்கும்; குட்டிகளின் உடலே நக்கி நக்கி அவற்றின் மேல் உள்ள அழுக்கைப் போக்கும்.

2. பூனேயின் முகம் உருண்டை வடிவமானது. அதன் மூக்கின் கீழ், வாய் அருகே இரு புறமும் மீசை மயிர்கள் நீண்டு இருக்கும். பூனேயின் உடல் நீண்டும் மெலிந்தும்

இருக்கும். சில பூனேகளின் உடலில் வரி வரி யான பட்டைக் கோடுகள் காணப்படும் ; சில பூனேகளின் உடலில் கோடுகளுடன் புள்ளி களும் இருப்பதுண்டு.

3. பூனேக்கு நான்கு கால்கள் உண்டு. அதன் கால்கள் குட்டையானவை ; உறுதியுள் ளவை. கால்களில் உள்ள பாதங்கள் மெத் தென்று இருக்கும். அவை அவ்வாறு அமைந் திருப்பதால் தான், அது நடக்கும்போது சத் தம் உண்டாவதில்லே. பூனேயின், கால் நகங் கள் வேண்டும்போது வெளியே நீட்டிக் கொள் ளவும், உள்ளே சுருக்கிக் கொள்ளவும் ஏற்ற வாறு அமைந்துள்ளன.

4. பூனே கூர்மையான கண் பார்வை உடையது. அதன் கண்மணிகள் பகலில் ஒடுங்கி ஒரு கோடுபோல் காணப்படும் ; இர வில் வட்ட வடிவமாகப் பளிச்சென்று தோன் றும். அதனுல் அதற்கு இருளிலும் கண் மிக நன்ருகத் தெரியும்.

5. பூனே வீட்டிலுள்ள பண்டங்களேத் திருட்டுத் தனமாய்த் தின்னும். பால், தயிர், வெண்ணெய், நெய் முதலானவற்றை விருப்ப மாய் உண்ணும். பூனே, இறைச்சியும் உண் ணும். பூனே பதுங்கியிருந்து எலியின் மேல் பாய்ந்து, அதைக் கொன்று தின்னும். பூனே திருட்டுக் குணம் உள்ள பிராணி.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| வடிவம் | பாதம் | வளர்க்கும் | பாய்ந்து |
| மீசை | கூர்மை | நிறைந்த | பதுங்கி |
| நக்கி | பார்வை | வரியான | ஏற்றவாறு |
| பட்டை | உருண்டை | அமைந்து | நடமாடும் |
| கோடு | மெலிந்து | கண்மணி | இழுத்து |
| புள்ளி | ஒடுங்கி | இறைச்சி | மெத்தென்று |

## வினுக்கள்

1. பூனே தன் குட்டிகளிடம் எவ்வாறு அன்பாக நடந்து கொள்ளும் ?
2. பூனேயின் உடல் அமைப்பு எவ்வாருனது ?
3. பூனேயின் கால்கள் எப்படி இருக்கும் ?
4. பூனே நடந்தால் ஏன் சத்தம் உண்டாவதில்லே ?
5. பூனே எவற்றை உண்ணும் ?

## இலக்கணம்

**கீழே காணும் வினேச் சொற்களேக் கவனி :**

| (1) | (2) | (3) |
|---|---|---|
| படித்தான் | படிக்கிருன் | படிப்பான் |
| ஆடினுன் | ஆடுகிருன் | ஆடுவான் |
| கொடுத்தான் | கொடுக்கிருன் | கொடுப்பான் |
| வந்தான் | வருகிருன் | வருவான் |

1. முதல் வரிசையில் உள்ள சொற்கள், செயல் நடந்து முடிந்துவிட்டதைக் குறிக்கின்றன. ஆதலால், அச்சொற்கள் **இறந்த காலம்** எனப்படும்.

2. இரண்டாம் வரிசையிலுள்ள சொற்கள் செயல் நடந்து கொண்டிருப்பதைத் தெரிவிக்கின்றன. ஆதலால், அவை **நிகழ் காலம்** எனப்படும்.

3. மூன்ரும் வரிசையிலுள்ள சொற்கள், செயல் இனி நடக்கப் போவதைக் குறிக்கின்றன. அவை **எதிர் காலம்** எனப்படும்.

எனவே காலம், **இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்** என மூன்று வகைப்படும்.



# 23. சிற்றூர்

சேரிக்குப் பெரிது சிற்றூர் ;
தென்னைமா சூழ்ந்தி ருக்கும் ;
தேர்ஒன்று கோயில் ஒன்று
சேர்ந்தஓர் வீதி, ஓட்டுக்
கூரைகள், கூண்டு வண்டி,
கொட்டில்சேர் வீதி ஐந்தே ;
ஊர்இது ; நாட்டார்க் கெல்லாம்
உயிர்தரும் உணவின் ஊற்று.

—பாரதிதாசன்

## வினாக்கள்

1. சிற்றூரைச் சூழ்ந்திருப்பன யாவை ?
2. சிற்றூரில் காணப்படுவன யாவை ?
3. உயிர்தரும் உணவின் ஊற்று—யாது ?



## 24. கிழவியும் முயலும்-1

1. முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் அவள் சந்தையிலிருந்து முயல் ஒன்று வாங்கி வந்தாள். அந்த முயல் கிழவியுடன் வீட்டிற்கு வர மறுத்து அடம் பிடித்தது. கிழவி சினம் கொண்டாள். அங்கொரு நாய் வந்தது. கிழவி நாயைப் பார்த்து, " நாயே, முயல் நான் சொன்னபடி கேட்கமாட்டேன் என்கிறது; அதைக் கடித்துத் துன்பப் படுத்து !'' என்று கேட்டுக்கொண்டாள். நாய் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டது.

2. கிழவி சிறிது தூரம் சென்றுள். ஒரு மூலையில் கோல் ஒன்று கிடந்தது. அதைப்



பார்த்து, ‘‘கோலே, கோலே, செங்கோலே! முயல் வீட்டிற்கு வர மறுக்கிறது; நாய் முயலைக் கடிக்க மறுக்கிறது. நீ அந்த நாயை அடித்து விரட்டு,’’ என்று கேட்டாள். கோல் அவ்வாறு செய்ய இணங்கவில்லை.

3. கிழவி சினங் கொண்டு மேலும் சிறிது தூரம் சென்றாள். அங்கோரிடத்தில் தீ எரிந்துகொண்டிருந்தது. அதை நோக்கி, ‘‘தீயே! முயல் வீட்டிற்கு வர மறுக்கிறது; நாய் முயலைக் கடிக்க மறுக்கிறது; கோல் நாயை விரட்ட மறுக்கிறது; நீ கோலை எரித்துச் சாம்பலாக்கி விடு!’’ என்று கிழவி கேட்டாள். தீ, அவ்வாறு செய்ய இயலாது என்று கூறிவிட்டது.

4. கிழவி தொடர்ந்து சிறிது தூரம் சென்றாள். அங்கு ஒரு பெரிய தொட்டியில் நீர் நிறைந்திருந்தது. தொட்டியைப் பார்த்து,

"தொட்டி நீரே, தீ நான் சொன்னபடி நடக்க வில்லை. நீ அதை அணைத்துவிடு!'' என்று வேண்டினுள் கிழவி. தொட்டியும் மறுத்து விட்டது.

5. கிழவி வருத்தம் கொண்டு ஓர் எரு திடம் போனுள். "அருமை எருதே! தொட்டி நீர் என்னை மதிக்கவில்லை. அந்நீர் முழுவ தையும் நீ குடித்துவிடு!'' என்று கிழவி கேட் டாள். எருது முக்காரமிட்டு அகன்று விட்டது.

6. கிழவி வருத்தத்துடன் சென்று கொண்டிருந்தாள். வழியில் மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவனைக் கண்டாள். கிழவி அவனை நோக்கி,

"முயலும் வர மறுத்தது,
நாயும் கடிக்க மறுத்தது,
கோலும் அடிக்க மறுத்தது,
தீயும் எரிக்க மறுத்தது,
நீரும் அணைக்க மறுத்தது,
எருதும் குடிக்க மறுத்தது,
எருதைப் பிடிக்க வருவாயோ!''

என்று கேட்டாள். சிறுவனும் மறுத்து விட் டான். கிழவி மனம் சலித்து என்ன செய்வது என்று அறியாமல் விழித்தாள்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| கிழவி | கோல் | சலித்து | முக்காரம் |
| ஒருத்தி | மேய்க்கும் | மதிக்க | அகன்று |
| அடம் | விரட்டு | வருத்தம் | அணைத்து |
| சினம் | எரித்து | அங்கொரு | இயலாது |
| துன்பம் | சாம்பல் | விழித்தாள் | தொடர்ந்து |

## வினக்கள்

1. கிழவி நாயை ஏன் உதவிக்குக் கூப்பிட்டாள் ?
2. கிழவி கோலிடம் கூறியது என்ன ?
3. கிழவி தொட்டி நீரை ஏன் உதவச் சொன்னாள் ?
4. கிழவி எருதிடம் கூறியது என்ன ?
5. கிழவி மனம் சலித்து ஏன் விழித்தாள் ?

## இலக்கணம்

1. கீழ்க்காணும் சொற்களில் இறந்தகால வினைச் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக :—

| | | |
|---|---|---|
| வருவான் | கூறினான் | மேய்க்கிறான் |
| சென்றான் | குடிப்பான் | செய்தான் |
| போவான் | மறுத்தான் | குடிக்கிறான் |
| விழித்தாள் | செல்வான் | |

2. இவ்வாக்கியங்களில் வரும் நிகழ்கால வினைச் சொற்களை மட்டும் எடுத்து எழுதுக :—

1. சுந்தரம் பாடம் படிக்கிறான்.
2. கிழவி வழி நடந்தாள்.
3. முயல் அடம் பிடிக்கிறது.
4. பையன்கள் ஓடுகிறார்கள்.
5. வேலன் நாளை வருவான்.



## 25. என் கதை

1. என்னைச் சுமந்து சென்றவர் ஒரு வீட்டு வாசலில் நின்றார்; 'சுந்தரம்!' என்று கூப்பிட்டார். வீட்டிற்குள்ளிருந்து சிறுவன் ஒருவன் ஓடி வந்தான். அவர் என்னை எடுத்துச் சிறுவனிடம் கொடுத்துப் போய்விட்டார். அந்தச் சிறுவன் என்மேல் எழுதியிருந்த செய்திகளைப் படித்தான். நான் யார் என்று தெரிந்து கொண்டீர்களா? நான் ஒரு 'தபால் கடிதம்.'

2. பாளையங்கோட்டையில் ஒருவர் என் மேல் ஏதேதோ எழுதி, தபால் நிலையத்தில்

இருந்த தபால் பெட்டிக்குள் என்னைப் போட்டு விட்டுப் போய்விட்டார். அதற்குள் என் போன்றவர் பலர் இருந்தனர். ஒரு தபால் ஊழியர் அந்தப் பெட்டியைத் திறந்தார். அவர் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் எடுத்துக் கொண்டு தபால் நிலையத்திற்குள் சென்று விட்டார்.

3. தபால் நிலையத்தில் என்னை ஒரு மேசைமேல் போட்டார்கள். பிறகு என் மீது ஒரு குத்து விழுந்தது. என்மீது முத்திரை குத்துகிறார்கள் என்று பிறகு தெரிந்து கொண்டேன். அதன் பிறகு, என்னையும் மற்றவர்களையும் ஒரு பையில் போட்டுக் கட்டினார்கள்.

4. நான் அடங்கியிருந்த பையை ஒரு வண்டியில் போட்டுப் புகைவண்டி நிலையத்திற்குக் கொண்டுபோனார்கள். தபால் ஊழியர், புகைவண்டித் தொடரில் உள்ள ஒரு வண்டியில் நான் இருந்த பையைக் கொடுத்துச் சென்று விட்டார். அந்த வண்டியில் இருந்த சிலர், பையை அவிழ்த்து, என்னையும் மற்றவர்களையும் எடுத்தார்கள்; திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல வேண்டிய கடிதங்களுடன் என்னையும் சேர்த்தார்கள். பிறகு, எங்களை ஒரு பையில் போட்டுக் கட்டினார்கள். திருச்சியில் அந்தப் பையை ஒரு தபால் ஊழியர் வாங்கிச் சென்றார்.

5. நான் இப்பொழுது திருச்சிராப் பள்ளித் தபால் நிலேயத்தை அடைந்து விட்டேன். அங்கு நான் இருந்த பையைத் திறந்தார்கள். மறுபடியும் என்மீது ஒரு குத்து விழுந்தது. அதன்பின், நான் ஒரு தபால்காரர் கையை அடைந்தேன். அவர் என்னேயும், என்போன்ற மற்றக் கடிதங்களேயும் எடுத்துக் கொண்டு வீதி வீதியாகச் சென்ருர். அவர் தான் இச்சிறுவனிடம் என்னேக் கொடுத்தார். என் வரவால் சுந்தரம் மகிழ்ச்சி அடைந்தான்; மகிழ்ந்து கூத்தாடினுன்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| சுமந்து | சேர்ந்தவர் | பிரித்தார்கள் |
| ஏதேதோ | கழிக்க | இடுவார்கள் |
| முத்திரை | வரவால் | கடிதம் |
| ஊழியர் | குத்து | அடங்கி |
| சென்றவர் | செய்தி | தொடர் |
| என்மீது | விழுந்தது | அவிழ்த்து |
| தெரிந்து | யார் | தபால்காரர் |

## வினுக்கள்

1. கடிதம் தபால் பெட்டியிலிருந்து எங்கு கொண்டு செல்லப்பட்டது ?

2. புகைவண்டியில் அக்கடிதத்தை என்ன செய்தார்கள் ?

3. கடிதத்தின் மேல் எத்தனே முறை முத்திரை இடுவார்கள் ?



## 26. இளமை நிகழ்ச்சி

1. இப்பொழுது நம் பாரத நாட்டின் முதல் அமைச்சராய் விளங்கிவரும் பண்டித **ஜவாஹர்லால் நேருவை** நீங்கள் அறிவீர்கள். அவருடைய இளமை நிகழ்ச்சிகளை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.

2. ஜவாஹரின் தந்தையார் பெயர் **மோதிலால் நேரு** என்பது; தாயார் பெயர் சொரூபராணி அம்மையார். அவர்கள் ஜவாஹரை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தார்கள். அவர்கள் ஜவாஹர் விரும்பும்

பொருள்களை எல்லாம் அன்புடன் வாங்கித் தருவார்கள்.

3. ஜவாஹர் ஆறு வயதுச் சிறுவராக இருக்கும்போது ஒரு நாள் அவர் தந்தையார் வெளியே சென்றிருந்தார். அப்பொழுது ஜவாஹர் அவர் அறைக்குள் மெல்லச் சென்றார். அங்கு, மேசைமேல் விலை உயர்ந்த பேனாக்கள் இரண்டு இருந்தன; அவை மிகவும் அழகாய் இருந்தன. தந்தையாருக்கு இரண்டு பேனாக்களும் வேண்டியிராது என்று ஜவாஹர் கருதினார்; அவற்றுள் ஒன்றை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டார். அதை அவர் யாரிடமும் கூறவில்லை.

4. மோதிலால், தம் பேனாக்களுள் ஒன்றைக் காணோம் என்பதைக் கண்டு கொண்டார். வீட்டில் உள்ள எல்லோரையும் அழைத்துக் கேட்டார். எவரும் எடுக்க வில்லை என்று கூறிவிட்டார்கள். ஜவாஹரும் தான் எடுக்கவில்லை என்று கூறிவிட்டார். மோதிலால் பல இடங்களில் தேடிப் பார்த்தார். கடைசியில் ஜவாஹர் அறையில் அது காணப் பட்டது. பேனாவை எடுத்தது ஜவாஹர்தான் என்பது உறுதி ஆயிற்று. மோதிலால் சினங் கொண்டு தம் மகனை நையப் புடைத்தார்.

5. ஜவாஹர், பின்பு உண்மையைக்

கூறி மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அவர் அடைந்தது கொடிய தண்டனைதான். இருப்பினும், தான் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனையே என்று அவர் எண்ணினார். 'பிறர் பொருளை நாமாக எடுத்துக் கொள்ளக் கூடாது; பொய் கூறக் கூடாது' என்று அவர் அப்பொழுது உறுதி செய்து கொண்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அவர், பிறர் பொருளைத் தொட்டதும் இல்லை; பொய் கூறினதும் இல்லை. சிறு வயதிலேயே நீங்கள் நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| பாரதநாடு | நைய | பிறர் |
| நிகழ்ச்சி | புடைத்தார் | நற்பழக்கம் |
| இளமை | மன்னிப்பு | மெல்ல |
| செல்வமாக | தண்டனை | அவற்றுள் |
| காணோம் | குற்றம் | விலை உயர்ந்த |
| விளங்கி | மறைத்து | கடைப்பிடிக்க |

## வினாக்கள்

1. ஜவாஹரின் பெற்றோர் யாவர்?
2. தந்தையாரின் அறையில் ஜவாஹர் செய்தது என்ன?
3. ஜவாஹருக்கு ஏன் தண்டனை கிடைத்தது?
4. அவர் செய்துகொண்ட உறுதி யாது?

## பயிற்சி

**வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—**

விலை உயர்ந்த மறைத்து
செல்வமாக கொடிய தண்டனை

## இலக்கணம்

இராமன் புத்தகத்தை எடுத்தான் : இது ஒரு வாக்கியம். இதில் 'எடுத்தான்' என்னும் சொல் செயலைக் காட்டுகிறது. இது ஒரு வினைச்சொல். இச் சொல்லி லேயே இந்த வாக்கியத்தின் பயன் அடங்கியிருக்கிறது ; அதாவது, இச்சொல்லே இவ்வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கிறது. ஆகவே, இவ்வாக்கியத்தில் இது பயனிலை. இவ்வாறு வாக்கியத்தின் பயன் அடங்கியுள்ள (வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கும்) சொல் பயனிலை என்று சொல்லப்படும்.

'எடுத்தான்' என்னும் பயனிலைக்கு முன் 'யார்' என்னும் சொல்லை வைத்து 'யார் எடுத்தான் ?' என்று கேள்வி கேட்டால், அதற்கு 'இராமன்' என்பது விடையாக வரும். இவ்வாறு பயனிலைக்கு முன் 'யார் ?' அல்லது 'எது ?' என்று கேட்டு, அதற்கு விடையாக வரும் சொல் எழுவாய் என்று சொல்லப்படும்.

'எடுத்தான்' என்னும் பயனிலைக்கு முன் 'எதை' என்னும் சொல்லை வைத்து, 'எதை எடுத்தான் ?' என்று கேள்வி கேட்டால், அதற்குப் 'புத்தகத்தை' என்பது பதிலாக வரும். இவ்வாறு பயனிலைக்கு முன் 'எதை ?' அல்லது 'யாரை ?' என்று கேட்டு அதற்குப் பதிலாக வரும் சொல் செயப்படு பொருள் என்று சொல்லப்படும்.



## 27. புகைவண்டிப் பிரயாணம்

மாமா என்னைத் திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துச் சென்றார். முதலில் நாங்கள் திருநெல்வேலிப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம்.

**சுந்தரம் :** மாமா, அந்தச் சன்னலின் வழியாக நீங்கள் என்ன வாங்கினீர்கள் ?

**மாமா :** நாம் திருச்சிக்குச் செல்ல வேண்டும் அல்லவா ? அதற்குரிய கட்டணத்தை இங்கே செலுத்தி **டிக்கெட்** வாங்கினேன். வா, உள்ளே போவோம்.

[மேடையை அடைந்தார்கள். மணி ஓசை கேட்கிறது.]

**சுந்த. :** 'டாண், டாண்', என்று தொடர்ச்சியாக மணி அடித்தார்களே, எதற்காக மாமா ?

**மாமா :** 'இன்னும் சிறிது நேரத்தில் வண்டி இங்கு வந்து சேரும்' என்பதை அறிவிப்பதற்காக மணி அடித்தார்கள்.

**சுந்த. :** ஆம் மாமா! அதோ தூரத்தில் புகை தெரிகிறது. வண்டி வந்துகொண்டிருக் கிறது.

[வண்டித்தொடர் வந்து சேர்ந்தது.]

**சுந்த. :** மாமா, மாமா, இதோ இந்த வண்டியில் ஏறிக்கொள்வோம். இதில் கூட்டம் இல்லை. தவிர, உட்காரும் இடங்களுக்கு மெத்தையும் போட்டிருக்கிறார்கள். இதிலேயே ஏறிக் கொள்வோம்.

**மாமா :** இது உயர்வகுப்பு வண்டி. இதில் பிரயாணம் செய்யவேண்டுமானால் கூடுதலாகக் கட்டணம் செலுத்த வேண்டும். நாம் மூன்றாம் வகுப்பில்தான் பிரயாணம் செய்யவேண்டும். அதோ அந்தப் பெட்டியில் கூட்டம் சிறிது குறைவாக இருக்கிறது. நாம் அதில் ஏறிக்கொள்வோம்.

[ஒரு வண்டியில் ஏறி அமர்கிறார்கள்.]

**சுந்த. :** மாமா, கையில் கொடி பிடித்துக் கொண்டு ஒருவர் வருகிறாரே, அவர் யார் மாமா?

**மாமா :** அவர்தான் 'கார்டு' என்பவர். அவரே இந்த வண்டித்தொடர் பாதுகாப்பாளர். அவர் கையிலுள்ள பச்சைக் கொடியை இப்

பொழுது உயர்த்திப் பிடித்து ஆட்டுகிறார்; வாயில் ஊதல் வைத்து ஊதுகிறார்; பார். அவர் இவ்வாறு செய்தால் வண்டி புறப்படும். வண்டி புறப்பட்டுவிட்டது பார்த்தாயா?

**சுந்த.:** வண்டியை நிறுத்த வேண்டுமானால் என்ன செய்வார்?

**மாமா:** சிவப்புக் கொடியை ஆட்டுவார். வண்டியை ஓட்டுபவர் அந்த எச்சரிக்கையைக் கவனித்து வண்டியை நிறுத்தி விடுவார்.

வண்டி இரவு ஒன்பது மணிக்குத் திருச்சியை அடைந்தது. புகைவண்டிப் பிரயாணம் எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| உரிய | எச்சரிக்கை | கட்டணம் |
| கூடுதல் | பிரயாணம் | தொடர்ச்சி |
| கொடி | உயர்த்தி | அறிவிப்பது |
| தொடர் | குறைவாக | உயர் வகுப்பு |
| மெத்தை | நிறுத்த | பாதுகாப்பாளர் |
| புகை | அல்லவா | புறப்படும் |

## வினாக்கள்

1. புகைவண்டி நிலையத்தில் எதற்காக மணி அடித்தார்கள்?
2. உயர் வகுப்பு வண்டி எப்படி இருக்கும்?
3. வண்டி புறப்படுமுன் பாதுகாப்பாளர் என்ன செய்வார்?
4. வண்டியை நிறுத்த வேண்டுமானால் அவர் என்ன செய்வார்?

## பயிற்சி

அ. 1. நான் நேற்று பள்ளிக்குச் சென்றேன்.
2. கந்தன் இப்பொழுது வந்து கொண்டிருக்கிருன்.
3. சுந்தரம் நாளை திருச்சி செல்வான்.

மேலே காணும் முதல் வாக்கியத்தைக் கவனி. செயல் நேற்று நடந்ததாக இருக்கிறது; அதனுல் இறந்த காலம் காட்டுமாறு சென்ருன் என்று முடிகிறது.

இரண்டாம் வாக்கியம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கும் செயலைக் குறிக்கிறது; அதற்குப் பொருத்தமாக வந்து கொண்டிருக்கிருன் என்று முடிக் கப்பட்டிருப்பதைக் கவனி.

மூன்ரும் வாக்கியம் இனி நடைபெறப் போகும் செயலைக் குறிக்கிறது; அதனுல் செல்வான் என்று முடிகிறது.

ஆகவே, செயல் நடைபெறுவதற்குப் பொருத்தமாக வாக்கியங்கள் முடிவு பெறவேண்டும்.

ஆ. 1. இளங்கோ பள்ளிக்குச் சென்ருன்.
2. பார்வதி கோவிலுக்குச் சென்ருள்.

முதல் வாக்கியத்தைக் கவனி. இளங்கோ என்பது ஒரு சிறுவன் பெயர்; இப்பெயர் ஆண்பால் பெயர். அதன் முடிவைப் பார்; சென்ருன் என்று இருக்கிறது. இரண்டாம் வாக்கியத்திலுள்ள பார்வதி என்னும் பெயர் பெண்பால் பெயர். அந்த வாக்கியத்தின் முடிவைப் பார்; சென்ருள் என்று இருக்கிறது.

வாக்கியத்தில் வரும் ஆண்பால், பெண்பால் பெயர் களுக்கு ஏற்றவாறு, வாக்கியத்தின் முடிவு பொருத்தமாக இருக்க வேண்டும்.

# 28. கிழவியும் முயலும்–2

1. கிழவி கேட்டுக் கொண்டபடி மாட்டுக்காரச் சிறுவன், எருதைப் பிடித்துக் கட்ட மறுத்து விட்டான் அல்லவா? அதன் பின், கிழவி மனம் உடைந்து சென்று கொண்டிருந்தாள். வடக்கயிறு ஒன்று கீழே கிடந்தது. அதை நோக்கி, மாட்டுக்காரச் சிறுவனைப் பிணைத்துக் கட்டுமாறு கேட்டாள். வடக்கயிறு பேசாமல் இருந்து விட்டது.

2. கிழவி மேலும் செய்வது அறியாது விழித்தாள். அப்பொழுது அங்கு எலி ஒன்று வந்தது. அதைப் பார்த்து, "எலியே, வடக்கயிறு சொன்னபடி கேட்க மறுக்கிறது. அதைத் துண்டித்து விடு," என்று கேட்டாள். எலி, "நான் மாட்டேன்," என்று சொல்லிக் கொண்டே ஓடி ஒளிந்தது.

3. கிழவிக்குக் கால் வலி கண்டு விட்டது. நடக்க முடியாமல் திணறினாள். அப்பொழுது அங்கு ஒரு பூனை வந்து நின்றது. கிழவியைப் பார்த்து, "பாட்டி, பாட்டி, நீ ஏன் இவ்வாறு திணறுகிறாய்?" என்று கேட்டது. கிழவி, பூனையைப் பார்த்து,

"முயலும் வர மறுத்தது,

* * * * * * * * *

எருதும் குடிக்க மறுத்தது,
சிறுவன் பிடிக்க மறுத்திட்டான்,
கயிறும் பிணைக்க மறுத்தது,
எலியும் அறுக்க மறுத்தது,
பூனை யாரே உதவுவீர் !''

என்று கூறினாள்.

4. கிழவியின் பேச்சைக் கேட்டுப் பூனை மனம் இரங்கிற்று.

“ பாட்டி ! மனம் இரங்கினேன்,
பாலும் கொஞ்சம் தருவாயா ?
எலியைப் பிடிக்க வருகிறேன்;''

என்று ஒப்புக் கொண்டது.

5. கிழவி மகிழ்ச்சியோடு ஒரு பசுவிடம் சென்றாள் ; பால் வேண்டும் என்று கேட்டாள். ஆனால் பசு, “ எனக்குச் சிறிது வைக்கோல் கொண்டு வந்தால், அதைத் தின்றுவிட்டுப் பிறகு பால் தருவேன்,'' என்றது. கிழவி வைக்கோல்காரனிடம் சென்று, “ ஐயா, ஒரு கைப்பிடி அளவு வைக்கோல் கொடுக்க மாட்டாயா ?'' என்று கெஞ்சிக் கேட்டாள். வைக்கோல்காரன் ஒரு கட்டு வைக்கோல் கொடுத்தான்.

6. கிழவி வைக்கோலைப் பசுவிற்குக் கொடுத்தாள். பசு பால் சுரந்தது; பூனை, பாலைப் பருகி எலியைப் பிடிக்கத் தாவியது ; எலி, வடக்கயிற்றைத் துணிக்க ஓடியது ;

வடக்கயிறு சிறுவனைப் பிணைக்க வளர்ந்தது ; சிறுவன் எருதைப் பிடிக்க ஓடினான் ; எருது தொட்டி நீரைப் பருகச் சென்றது ; தொட்டி நீர், தீயை அணைக்கப் பாய்ந்தது ; தீ, கோலை எரிக்கப் பரவியது ; கோல் நாயை அடிக்க எழுந்தது ; நாய் முயலைக் கடிக்கப் பாய்ந்தது ; முயல் பதுங்கிக் கொண்டே வீட்டினுள் சென்றது. கிழவியும் மகிழ்ச்சி கொண்டாள்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| உடைந்து | வலி | பருகி |
| கயிறு | இரங்கி | பரவியது |
| பிணைத்து | கெஞ்சி | எழுந்தது |
| துண்டித்து | பசியாற | திணறி |
| ஒளிந்தது | சுரந்து | |

## வினாக்கள்

1. கிழவி பூனையிடம் என்ன கூறினாள் ?
2. பூனை கூறிய பதில் யாது ?
3. வைக்கோலைப் பசுவிற்குக் கொடுத்த பிறகு நடந்தவை யாவை ?

## பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுதுக :—

1. தவமணி பந்தை வீசினான்.
2. வேலன் மரத்தை வெட்டினான்.
3. நாய் முயலை விரட்டியது.
4. கிழவி பசுவைக் கண்டாள்.
5. சிறுவன் மாட்டை அடித்தான்.

## 29. "ஏன், ஏன், ஏன்?"

1. அமெரிக்க நாட்டில் மைலன் என்னும் நகரத்தில் ஒரு சிறுவன் பிறந்தான். குழந்தைப் பருவத்திலேயே அவன் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் காணப்பட்டான். ஐந்து வயதில் அவனைப் பள்ளியில் சேர்த்தார்கள். ஆனால் பள்ளியில் அவன் மூன்று மாத காலமே கல்வி கற்றான். இந்தச் சிறுவன் பெயர் **எடிசன்** என்பதாம்.

2. எடிசன் பள்ளியில் படிக்கத் தொடங்கினார். அவர் எதற்கு எடுத்தாலும் ஓயாமல் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்து கொண்டே இருப்பார். விவரங்கள் முழுமையும் அப்பொழுதே தெரிந்து கொண்டு விடவேண்டும் என்று அவருக்கு அவ்வளவு ஆசை! ஆனால் ஆசிரியர், அவர் வயதிற்கு மீறிய கேள்விகளைக் கேட்கிறார் என்று கருதி அவரைப் பள்ளியினின்றும் நீக்கினார்.

3. எடிசன் வீட்டிலும் தம் தாய் தந்தையரை ஏதேனும் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார். "ஏன், ஏன், ஏன்?" நாள் முழுதும் இதே கேள்வி! அவர் பெற்றோரும் இக் கேள்வியால் மனம் சலித்தார்கள். எடிசன், தன் தாயாரிடம் சிறிது கல்வி கற்றுவந்தார். தவிர, அவர் பல ரசாயனப் பொருள்களை வீட்டில்

சேர்த்திருந்தார். எப்பொழுதும் அவர் ஏதாவது பரிசோதனை செய்து கொண்டே இருப்பார்.

4. எடிசனுக்கு மைக்கேல் என்னும் தோழர் ஒருவர் இருந்தார். எடிசனால் ஆகாதது எதுவுமே இல்லை என்று அவர் நம்புவார். ஒரு நாள் எடிசன் ஏதோ மருந்துத் தூள் ஒன்றை மைக்கேலிடம் கொடுத்து விழுங்கச் சொன்னார்; அவ்வாறு செய்தால் அவர் வானத்தில் பறக்க முடியும் என்று கூறினார். மைக்கேல், எடிசன் கூறியதை அப்படியே நம்பினார். மருந்துத் தூளை மென்று விழுங்கினார்; ஆனால் பறப்பதற்குப் பதிலாக, கீழே குப்புற விழுந்து, வயிற்று நோயால் துடித்துக் கதறினார்!

5. எடிசன் தமது பன்னிரண்டாம் வயதிலிருந்தே பல பரிசோதனைகளைச் செய்து வெற்றி பெற்றார். பிற்காலத்தில் இவர் ஒரு சிறந்த விஞ்ஞானியாக விளங்கினார். பல புதுமைகளை இவர் நமக்கு அளித்திருக்கிறார். இவர் புதிய முறையில் மின்சார விளக்குகளை எரியச் செய்தார்; கிராமபோன் கருவியையும், இசைத் தட்டுகளையும் கண்டுபிடித்தார்; சினிமாப் படக் காட்சியும், பேசும் படக்காட்சியும் தோன்றச் செய்தார்.

6. சிறு வயதில் எடிசனை 'எதற்கும் உதவாதவன்' என்று எல்லோரும் கருதினர்

கள். ஆனால் அதே எடிசன் உலகம் போற்றும் விஞ்ஞானியாக விளங்கினார்.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| ஓயாமல் | தூள் | வயிற்று நோய் |
| தொந்தரவு | விழுங்க | சுறுசுறுப்பு |
| முழுமை | மென்று | விவரங்கள் |
| மீறிய | குப்புற | பரிசோதனை |
| நீக்கி | புதுமை | ரசாயனம் |
| சலித்தார் | இசை | ஆகாதது |
| தோழர் | காட்சி | விஞ்ஞானி |
| நம்பு | தோன்ற | மின்சாரம் |

## வினாக்கள்

1. எடிசன் ஏன் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டார்?
2. எடிசன் பெற்றோர் ஏன் மனம் சலித்தார்கள்?
3. எடிசனும் மைக்கேலும் செய்த பரிசோதனை யாது? அது எப்படி முடிந்தது?
4. எடிசன் கண்டுபிடித்த புதுமைகள் நான்கு கூறுக.

## பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களை நன்கு உச்சரித்துப் படி:

1. கண்ணன் வெண்ணெய் தின்றான்.
2. எண்ணெய்க் கிண்ணம் வாங்கினான்.
3. பழம் பழுத்து விழுந்தது.
4. புலி புல்லைத் தின்னுமா?
5. புளியமரத்தில் குரங்கு உட்கார்ந்திருக்கிறது.
6. வரகு விற்று விறகு வாங்கினான்.
7. வெள்ளிக்கிழமை பள்ளி உண்டு.
8. தமிழரசி தமிழ் நூல் படிக்கிறாள்.

## 30. பரம்பொருள்

சூரியன் வருவது யாராலே ?
சந்திரன் திரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற்படுவன அவை என்ன ?

பேரிடி மின்னல் எதனாலே ?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி ?
அதைநாம் எண்ணிட வேண்டாவோ ?

அல்லா என்பார் சிலபேர்கள் ;
அரன் அரி என்பார் சிலபேர்கள் ;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள் ;

சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்.
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒரு பொருள் இருக்கிறதே !

அந்தப் பொருளை நாம் நினைந்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?

நிந்தை பிறரைப் பேசாமல்,
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் ; அதை வணங்கிடுவோம் ;
வாழ்வோம் ; சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

## அருஞ்சொற் பொருள்

காரிருள் - (கருமை + இருள்) கருமையான இருட்டு ; வானில் - ஆகாயத்தில் ; கண்ணிற் படுவன - கண்ணிற் தென்படுவன.

பேரிடி - (பெருமை + இடி) பெருத்த ஓசை செய்யும் இடி ; ஆர் - யார் ; அதிகாரி - கட்டளையிடும் தலைவன்.

அல்லா - இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள் வணங்கும் தலைவர் பெயர் ; அரன் - பரமசிவன் ; அரி - திருமால் ; வல்லான் - எல்லாம் செய்ய வல்ல ; பரமண்டலத்தில் - மோட்ச உலகத்தில்.

சொல்லால் விளங்கா - சொற்களினால் விவரிக்க முடியாத ; நிர்வாணம் - முத்திநிலை.

குலவிடுவோம் - உறவுகொண்டு நட்புடன் வாழ்வோம்.

நிந்தை - பழி ; வந்திப்போம் - வணங்குவோம்.

# செய்யுட் பாடம்

## வெற்றி வேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க்கு அழகு செங்கோன் முறைமை.
5. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது.
6. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
7. கற்கை நன்றே ; கற்கை நன்றே ;
   பிச்சை புகினும் கற்கை நன்றே.
8. சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
   பெரியோராயின் பொறுப்பது கடனே.
9. சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
   பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.
10. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
    இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
11. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
    நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
12. குடைநிழல் இருந்து குஞ்சர மூர்ந்தோர்
    நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
13. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
    அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
14. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
    அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
15. தறுகண் யானை தான்பெரி தாயினும்
    சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

16. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.

17. பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

18. மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

—அதிவீர ராமபாண்டியர்

## அருஞ்சொற் பொருள்

(2) கசடற - (கசடு + அற) குற்றம் நீங்க.

(3) செழுங்கிளை - செழும் + கிளை - நல்ல சுற்றத்தார்.

(4) செங்கோல் முறைமை - நீதி செலுத்தும் இயல்பாகும்.

(5) அடினும் - காய்ச்சினுலும் ; ஆ - பசு ; குன்ருது - குறையாது.

(7) புகினும் - எடுத்தாலும்.

(10) கேண்மை - நட்பு ; இரு நிலம் - பெரிய பூமி.

(11) மூர்க்கர் - கீழ்மக்கள்.

(12) குஞ்சரம் ஊர்ந்தோர் - யானையின்மேல் சென்றவர் ; நண்ணினும் - அடைந்தாலும்.

(13) அறக்கூழ்ச்சாலை - தருமத்திற்குக் கஞ்சி வார்க்கும் சத்திரம்.

(14) இரப்போர் - பிச்சை எடுப்போர்.

(15) தறுகண் - பயம் கொள்ளும் தன்மையே இல்லாத.

(17) சொல்வன்மை - பேச்சுத் திறமை.

(18) சொலமாட்டாமையால் - திறமையாக எடுத்துச் சொல்ல முடியாமையால்.

## மூதுரை

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே ;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். (2)

அட்டாலும் பால்சுவையில் குன்று(து) ; அளவளாய்!
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (3)

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா ;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (4)

நீரளவே ஆகுமாம் நீராம்பல் ; தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு !—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம் ;
குலத்தளவே ஆகும் குணம். (5)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. (6)

தீயாரைக் காண்பதுவும் தீதே ; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே ;—தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. (7)

நெல்லுக் கிரைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் ;—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. (8)

பண்டு முளைப்ப(து) அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் ;—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். (9)

மடல் பெரிது தாழை ; மகிழினிது கந்தம் ;
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா ;—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். (10)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (11)

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல் ;—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேலிட்ட கலம். (12)

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். (13)

சீரியர் கெட்டாலும் சீரியரே ; சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் ?—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் ; என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால் ? (14)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் ;–மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு. (15)

—ஔவையார்

### அருஞ்சொற் பொருள்

1. என்று தருங்கொல் என - எப்பொழுது பயன் கொடுக்குமோ என்று ; தளரா - சோர்வடையாமல் ; தெங்கு - தென்னை மரம் ; தாள் - அடி, வேர் ; உண்ட நீரை - உட்கொண்ட தண்ணீரை ; தலையாலே - மரத்தின் உச்சியில் காய்க்கும் இளநீரால்.

தென்னை மரமானது தான் வேரினால் பெற்ற தண்ணீரை இளநீராகக் கொடுத்து உதவுகிறது. அதுபோல நல்ல குணமுடையவருக்கு உதவி செய்தால், அவரும் சிறந்த உதவியை அளிப்பார்.

2. கல்மேல் எழுத்து-உறுதியான கருங்கல்லின்மேல் வெட்டப்பட்ட எழுத்து ; அல்லாத - நல்லவர் அல்லாத ; ஈரம் இலா நெஞ்சத்தார் - அன்பு இல்லாத மனம் உடையவர் ; ஈந்த - செய்த ; நேர் - ஒப்பாகும்.

நல்லவருக்குச் செய்யும் உதவி, கருங்கல்லின்மேல் வெட்டப்பட்ட எழுத்துப்போல் எப்பொழுதும் நிலைபெற்று

விளங்கும். அன்பு இல்லாதவர்களுக்குச் செய்யப்படும் உதவி நீரின்மேல் எழுதிய எழுத்தைப்போல் அப்பொழுதே அழிந்துவிடும். நல்லவர்கள் உதவியை மறக்க மாட்டார்கள் ; அன்பு அற்றவர்கள் பிறர் செய்த உதவியை அப்பொழுதே மறந்து விடுவார்கள்.

3. அட்டாலும் - காய்ச்சினாலும் ; குன்றாது - குறையாது ; நட்டாலும் - நட்புக் கொண்டாலும் ; நண்பு அல்லார் - நட்பின் குணம் தெரியாத கீழோர் ; நண்பு அல்லர் - நண்பர் ஆகமாட்டார்.

சுண்டக் காய்ச்சினாலும் பால் தன் இனிய சுவையில் குறையாது ; வெண்மையான சங்கை நெருப்பிலிட்டுச் சுட்டாலும் தன் வெண்மை நிறத்தை இழக்காது. அது போல மேன்மக்கள் எளிய நிலையை அடைந்தாலும் தமது மேன்மைக் குணத்தைக் கைவிடமாட்டார்கள்.

4. ஆகுநாள் அன்றி - முடியும் காலம் வந்தால் அல்லாமல் ; கருமங்கள் - செயல்கள் ; ஆகா - முடியா ; தொடுத்த - கிளையோடு கூடிய ; பருவத்தால் அன்றி - பழுக்கும் பக்குவக் காலம் வந்தால் அல்லாது ; பழா - பழுக்க மாட்டா.

5. நீர் ஆம்பல் - நீரில் உள்ள அல்லி மலரானது - நுண் அறிவு - கூர்மையான அறிவானது ; மேலை - முற்பிறவியில்.

அல்லிக்கொடி, அது வளர்ந்திருக்கும் நீரினுடைய ஆழத்தின் அளவே உயரமுடையதாக இருக்கும். ஒருவர் கற்ற கல்வியின் அளவுப்படி அவரது கூறிய அறிவு இருக்கும். முற்பிறவியில் ஒருவர் செய்த தவத்தின் அளவு இருக்கும் அவருடைய செல்வம். ஒருவர் பிறந்த குலத்தின் இயல்புப்படி இருக்கும் அவர் குணம்.

6. நல்லவர்களைப் பார்த்தலும், அவர்கள் சொல்வதைக் கேட்பதும், அவர்களுடைய நற்குணங்களைப் பேசுதலும், அவர்களோடு நட்புக் கொண்டிருப்பதும் நலம் தருவதாகும்.

7. திரு அற்ற - சிறப்பு இல்லாத; இணங்கி- சேர்ந்து, கூடி.

தீக்குணம் உடையவர்களைக் காண்பதும், அவர்கள் சொல்வதைக் கேட்பதும், அவர்களுடைய தீய குணங் களைப் பேசுவதும், அவர்களோடு சேர்ந்திருப்பதும் தீமை அளிக்கும்.

8. பொசியுமாம் - கசிந்து ஊறும்; தொல் உலகில் - பழமையான இவ்வுலகத்தில்; உளரேல் - இருப்பாரே யானால்.

9. பண்டு - முன்னே; விண்டுமி போனால் - உமி விண்டு போனால்; கொண்ட பேர் ஆற்றல் - மிகுந்த வல் லமை; அளவு இன்றி - துணை இல்லாமல்; ஏற்ற - எடுத் துக்கொண்ட.

மிகுந்த வலிமை உடையவர்களுக்கும் ஒரு செயலைச் செய்து முடிக்கத் தக்க துணை வேண்டும்.

10. மடல் - இதழ்; மகிழ் இனிது கந்தம் - மகிழம்பூ மணத்தில் சிறந்தது; மண் நீரும் - அழுக்கைக் கழுவுவ தற்கு ஏற்ற தண்ணீரும்; உண் நீர் - குடிக்கத்தக்க தண் ணீர்; சிற்றூறல் - சிறு ஊறல், ஊற்று நீர்.

பெரிய இதழ்களை உடைய தாழம்பூவைக் காட்டிலும் மிகச் சிறிய இதழ்களையுடைய மகிழம்பூ மிகுந்த மணம் தருகிறது. கடல் நீர் பெருகிப் பரந்து இருந்தாலும் அது எதற்கும் உதவாது. ஆனால் சிறிய ஊற்றில் கிடைக்கும் நீரானது குடிப்பதற்கும் உதவும்.

உருவத்தினால் பெரியவராகத் தோற்றம் அளிப்பவர் சிறியவர் ஆவதும், உருவத்தில் சிறியவராக இருப்பவர் குணத்தால் பெரியவராக ஆவதும் உண்டு.

11. கானம் - காட்டிலுள்ள; பாவித்து - நினைத்துக் கொண்டு; பொல்லாச் சிறகு - அழகு இல்லாத சிறகு; கல்லாதான் - கற்கவேண்டியவைகளை முறைப்படி கல்லா தவன்.

முறைப்படிக் கல்வி கற்காதவன், கற்றவனைப் போல நடித்தாலும் கற்றவனாகக் கருதப்பட மாட்டான்.

12. வேங்கை வரிப்புலி - உடலில் வரிகளையுடைய வேங்கைப் புலி ; விடகாரி - விடத்தைப் போக்கும் வைத்தியன் ; பாங்கு அறியா - நன்றியறிவு இல்லாத ; புல் அறிவாளர் - அற்ப அறிவு உள்ளவர்கள் ; கல்லின் மேலிட்ட கலம் - மண் குடத்தைக் கல்லின்மேல் போட்டால் எப்படி உடைந்து போகுமோ அதுபோல.

தீயவர்களுக்கு உதவி செய்தால் துன்பமே உண்டாகும்.

13. உற்ற - மானக்கேடு உண்டாகும் ; பற்றலர் - பகைவர் ; கற்றூண் - கல் தூண் ; பிளந்து இறுவது அல்லால் - பிளந்து முறிந்து விடுவதல்லாமல் ; தளர்ந்து - தளர்வுற்று.

கல் தூணின்மீது பெரும் பாரத்தை வைத்தால் அது பிளந்து விழுந்துவிடும் ; தளர்வுற்று வளைந்து கொடுக்காது. மானக்கேடு உண்டாகும் இடத்தில் தம் உயிரையே விடும் குணம் உடையவர்கள் பகைவரைக் கண்டால் பணிய மாட்டார்கள்.

14. சீரியர் - மேன்மக்கள் ; சீரியர்மற் றல்லாதார் - கீழ்மக்கள்.

பொன்னாலாகிய குடம் உடைந்து போனாலும் அதிலுள்ள பொன் பயன்படும் ; ஆனால் மண் குடம் உடைந்து போனால் அது எதற்கும் பயன்படாது. மேன்மக்கள் வறுமை அடைந்தாலும் அவர்கள் தம் குணத்தில் மாறுபட மாட்டார்கள்.

15. மாசு அற - குற்றம் நீங்க ; குறைவின்றி ; சீர் தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால்.

மன்னருக்கு அவருடைய நாட்டில் மட்டுமே சிறப்பு உண்டு ; ஆனால் கற்றவர்க்கு அவர் செல்லும் இடந்தோறும் சிறப்பு உண்டு.

1,30,872
-600 008.
31C3) N58

9-4-64-L